


ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் மாத இதழ்.

ஆசிரியர் : **பி. வீரராகவன்**

ஆண்டுச் சந்தா ரூ. 5]  [தனி இதழ் 50 ந. பை.

| மலர் 33 | ஏப்ரல் 1969 | இதழ் 4 |
|---|---|---|

# கல்வி அமைச்சரின் கருத்துரை

''பொதுவாக இந்தியாவிலும் சிறப்பாகத் தமிழகத்திலும் கல்வியை வளர்ப்பதில் தனியார் நிறுவனங்கள் தலைசிறந்து பணியாற்றியிருக்கின்றன. இந்த உண்மையை எடுத்துக் கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இன்றைய தினம் தமிழகத்தின் முதலமைச்சர் என்னும் பொறுப்பை ஏற்றுள்ள நானே தனியார் கல்வி நிறுவனத்தில் உருவாக்கப்பட்டவன்தான். 'பச்சையப்பன் அற நிலையம்' என்னும் தனியார் நிறுவனத்தால் நடத்தப்படுகிற தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, கல்லூரி ஆகியவற்றில்தான் நான் என்னுடைய கல்வி முழுவதையும் பெற்றேன். இத்தகைய நிலையில் தனியார் நிறுவனங்களால் பரப்பப்படுகிற கல்வியின் சிறப்பை நான் மறந்து விட்டால், என்னை நானே மறந்ததாக அல்லவா ஆகிவிடும்? தனியார் நிறுவனங்கள் கல்வியைப் பரப்பும் நற்பணியில் இதுவரை

**சிறப்பான முறையில் ஈடுபட்டு வந்ததைப்போலவே இனியும் தொடர்ந்து ஈடுபடவேண்டும் என்பதே என் வேண்டுகோள்."**

ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, அப்போது தமிழகத்தின் முதலமைச்சராக விளங்கிய **பேரறிஞர் அண்ணா அவர்கள்,** காஞ்சிபுரம் ஆண்டர்சன் உயர்நிலைப் பள்ளியின் பழைய மாணவர் சங்க ஆண்டு விழாவிற் கலந்துகொண்டு ஆற்றிய அரிய உரையின் ஒரு பகுதி இது.

**"தனியாரால் நடத்தப்படுகிற கல்வி நிறுவனங்கள் சில வற்றில் தவறுகள் நடக்கின்றன என்றும், ஆகவே தனியாரால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்கள் அனைத்தையும் அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும் என்றும் இங்குப் பேசிய உறுப்பினர்களில் சிலர் குறிப்பிட்டார்கள். தனியார் கல்வி நிறுவனங்கள் சிலவற்றில் தவறுகள் நடக்கக்கூடும். ஆனால் அதற்காகத் தனியாரின் கல்வி நிறுவனங்கள் அனைத்தையும் அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும் என்னும் கருத்தை இந்த அரசு ஏற்றுக் கொள்வதற்கில்லை. தனியாரால் நடத்தப்படும் பல கல்வி நிலையங்கள் சிறந்த முறையில் பணியாற்றுகின்றன; அவற்றில் தரப்படுகிற கல்வியின் தரம், அரசாங்கக் கல்வி நிலையங்களில் அளிக்கப்படுகிற கல்வியின் தரத்தைவிட உயர்ந்ததாக இருக்கிறது என்பது நாடறிந்த உண்மை."**

தமிழகத்தின் இப்போதைய கல்வி அமைச்சர் **திருவாளர் மாதவன் அவர்கள்** சில நாட்களுக்கு முன், தமிழகச் சட்ட மன்றத்தில் நடைபெற்ற விவாதம் ஒன்றிற்கு விடை அளித்துப் பேசுகையில் தெரிவித்த கருத்து இது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் தெரிவித்த கருத்தையும், தற்போது அமைச்சர் மாதவன் அவர்கள் தெரிவித்த கருத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பவர்களுக்கு ஓர் உண்மை தெள்ளத் தெளிவாக விளங்கும்.

தனியார் கல்விநிறுவனங்களைப் பொறுத்தவரையில் முன்பு அறிஞர் அண்ணாவின் அமைச்சரவை கொண்டிருந்த கருத்துக்கும், இப்போது கருணாநிதியின் அமைச்சரவை கொண்டுள்ள கருத்துக்கும் இடையே எத்தகைய வேறுபாடும் இல்லை என்பதே அந்த உண்மை.

தனியார் நிறுவனங்கள் கல்வியைவளர்ப்பதில் தலைசிறந்த முறையில் பணியாற்றி வருகின்றன என்பதுதான் அறிஞர் அண்ணா அமைச்சரவை கொண்டிருந்த கருத்து. அதுவேதான் கலைஞர் கருணாநிதியின் அமைச்சரவை கொண்டுள்ள கருத்தும்.

தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு ஆளாகாமல்—காய்தல் உவத்தல் இன்றி—உண்மை நிலையை உள்ளது உள்ளபடி ஆராய்ந்து பார்க்கிற எவரும் இந்த முடிவுக்குத் தான் வரமுடியும்.

அறிஞர் அண்ணா அவர்கள் அழகும் சுவையும் நிறைந்த வகையில் எடுத்துக் காட்டியிருப்பதைப்போல, பொதுவாக இந்தியா என்று எடுத்துக் கொண்டாலும் சரி, சிறப்பாகத் தமிழகம் என்று மட்டும் நம் கவனத்தைச் செலுத்திப் பார்த்தாலும் சரி, தனியார் கல்வி நிறுவனங்கள் கல்வியை வளர்ப்பதில் தன்னிகரற்றுப் பணியாற்றியிருக்கின்றன என்பது எங்கும் எவரும் மறுக்க முடியாத உண்மை.

இந்தக் காலம், கல்விப் பொருளின் அருமையையும் பெருமையையும் அனைவரும் அறிந்துள்ள காலம்; படிப்பறிவே இல்லாத பாமரமக்கள் கூடத் தங்கள் பிள்ளைகளும் பெண்களும் படிப்பறிவைப் பெற்றாகவேண்டும் என்பதில் பேரார்வம் காட்டுகிற காலம்; ஆண்டு தோறும் புதிய புதிய பள்ளிகளும் கல்லூரிகளும் தோன்றிக் கொண்டே இருந்துங்கூடப் படிக்க விரும்புகிற அத்தனை பேருக்கும் இடம் கிடைப்பது இயலாத செயல் என்கிற நிலை தோன்றிவிட்ட காலம்; தமிழ்நாடு முழுவதும் இலவச ஆரம்பக் கல்வி மட்டுமல்ல, இலவசப் புகுமுக வகுப்புக் கல்வியேகூட நடைமுறைக்கு வந்துவிட்ட காலம்.

ஆனால் தனியார் துறையினர் முதன் முதலில் கல்வி நிறுவனங்களைத் தொடங்கிய காலத்தில் கல்விப் பொருளுக்கு இத்தகைய பாராட்டோ வரவேற்போ பெருமையோ புகழோ பாமர மக்களிடம் இருந்ததில்லை.

''கல்வியாம் கல்வி, என்னத்திற்கு ஐயா கல்வி?'' என்று கேலிக் கணைகளை வீசிய காலம், அந்தக்காலம்.

''கல்வியா—எங்கள் ஊருக்கா—வேண்டவேவேண்டாம்'' என்று அழுத்தந் திருத்திமாக ஊர்ப் பெரியவர்கள் அடித்துக் கூறிய காலம் அந்தக் காலம்,

''பள்ளிக்கூடமா தொடங்கப் போகிறீர்கள்—ஏனையா இந்த வீண் வேலை—வேறு உருப்படியான வேலை ஏதும் செய்யத் தெரியாதா உங்க

ளுக்கு" என்று பலர் கிண்டல் பாணங்களைத் தொடுத்த காலம், அந்தக் காலம்.

கல்வி நிறுவனங்களைத் தொடங்க முன் வந்தவர்களுக்கு, ஆதரவு காட்டும் வார்த்தைகளோ, ஆர்வம் ஊட்டும் உதவிகளோ கிடைப்பதற்கு மாறாக எதிர்ப்பும் ஏளனமும் ஏசலும் மட்டுமே கிடைத்து வந்த காலம், அந்தக் காலம்.

அப்படிப்பட்ட காலத்தில்தான் தனியார் துறையினர் பலர், அஞ்சாத நெஞ்சமும் அசையாத உறுதியும் படைத்தவர்களாக, நீண்டகாலக் கண்ணோட்டமும் படிப்பறிவைப் பரப்புவதில் பேரார்வமும் படைத்தவர்களாகக் கல்வித் துறையில் நுழைந்து, பல கல்வி நிறுவனங்களைத் துணிந்து தொடங்கினார்கள்,

அரசாங்கத்தினரோ அல்லது நகராட்சி முதலிய உள்ளாட்சி மன்றங்களோ கல்விக் கூடங்களைத் தொடங்க முன் வராத அந்தக் காலத்திலேயே—அணிஅணியாகப் புறப்பட்ட ஆபத்துகளையும் அடுக்கடுக்காகத் தோன்றிய எதிர்ப்புகளையும் தாங்கிக்கொண்டு கல்வி நிறுவனங்களைத் தொடங்கி நடத்திய தனியார் துறையினரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இந்தியப் பெருநாடு முழுவதிலும் சரி, தமிழ்த்திரு நாடு மட்டிலும் சரி, இன்றையதினம் வானுற ஓங்கி ஆல்போல் தழைத்துச் செழித்து வளர்ந்து பொலிகிறதே கல்விப் பெரும் பொருள், இதற்கான அடிக்கல்லை அமைத்தவர்கள், தனியார் துறையினர்தான்.

கல்விப் பொருளை அள்ளிவழங்கும் அரும்பணியில் முதன் முதலில் ஈடுபட்டவர்கள் தனியார் துறையினர்தான் என்பது மட்டுமல்ல, நம்மால் கவனிக்கப்பட வேண்டிய உண்மை.

இன்றைய தினமும், அரசாங்கத்தால் அல்லது நகராட்சி—ஊராட்சி முதலிய உள்ளாட்சி மன்றங்களால் நடத்தப்படும் கல்வி நிலையங்களில் அளிக்கப்படும் கல்வியின் தரத்தைவிடத் தனியார் கல்வியின் நிலையங்கள் பலவற்றில் அளிக்கப்படும் கல்வியின் தரம் மிக உயர்ந்ததாக இருக்கிறது என்பது மறக்க முடியாத உண்மை, மறுக்க முடியாத உண்மையும்கூட,

எடுத்துக்காட்டாகத் தனியாரால் நடத்தப்படுகிற பல தொடக்கப் பள்ளிகளில் தரப்படுகிற கல்வியின் தரம், நகராட்சி மன்றங்

களால் நடத்தப்படுகிற தொடக்கப் பள்ளிகளின் கல்வித் தரத்தைவிட உயர்ந்ததாக இருக்கிறது என்பதை மக்கள் நன்கு அறிவர்.

தனியார் தொடக்கப் பள்ளிகளில் ஒவ்வொரு மாணவன்மீதும் தனித்தனிக் கவனம் செலுத்தப்பட முடிகிறது. அது மட்டுமல்ல. தனியார் பள்ளியைத் தொடங்கி நடத்துபவர், பள்ளியின் முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் அரும்பாடுபடுகிறார்; அந்தப் பள்ளியின் வளர்ச்சிதான் அவருடைய வளர்ச்சி என்று எண்ணிக்கொண்டு, பள்ளியின் பெயரும் புகழும் பெருகுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் அவர் மேற்கொள்கிறார். பள்ளியில் அளிக்கப்படுகிற கல்வியின் தரம் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்கிற உறுதி அவருக்கு இருக்கிற காரணத்தால் அத்தகைய தர உயர்வுக்குத் தேவையான ஏற்பாடுகள் அனைத்தையும் அவர் செய்து முடிக்கிறார். அரசாங்கம் அல்லது நகராட்சிகளால் நடத்தப்படுகிற தொடக்கப் பள்ளிகளால் இத்தகைய தனிக் கவனத்தைப் பெறமுடிவதில்லை.

தனியார் கல்வி நிறுவனங்களால் அளிக்கப்படும் கல்வியின் தரம் உயர்ந்ததாக இருக்கிறது என்பதுடன், அரசாங்கப் பள்ளி அல்லது உள்ளாட்சி மன்றப் பள்ளி ஒன்றினால் அரசாங்கத்திற்கு ஏற்படுகிற செலவை விடத் தனியார் பள்ளி ஒன்றினால் அரசாங்கத்திற்கு ஏற்படுகிற செலவு குறைவாக இருக்கிறது.

தனியார் கல்வி நிறுவனங்களால் அளிக்கப்படும் கல்வியின் தரமும் உயர்வு. அவற்றால் அரசாங்கத்திற்கு ஆகிற செலவும் குறைவு. இத்தகைய நிலையில் அத்தகைய தனியார் கல்வி நிறுவனங்களுக்குத் தேவையான ஊக்கமும் போதுமான ஆதரவும் தருவது அரசாங்கத்தின் இன்றியமையாத கடமை என்பதை நாம் கூறவும் வேண்டுமோ ?

இந்த உண்மைகளையெல்லாம் மிக நன்றாக அறிந்திருந்தவர் அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். ஆகவேதான் அவர், தனியார் கல்வி நிறுவனங்களை, வாய்ப்புக் கிடைத்த நேரங்களில் எல்லாம் மனமாரப் பாராட்டிப் புகழ்ந்தார். இந்த உண்மைகளை இப்போது உள்ள அமைச்சரவையும் மிக நன்றாக அறிந்திருக்கிறது. எனவேதான் இப்போதைய கல்வி அமைச்சர் திருவாளர் மாதவன் அவர்களும், தனியார் கல்வி நிறுவனங்கள் அனைத்தையும் அரசாங்கமே எடுத்து நடத்துவது என்பது, தேவையற்ற செயல் என்பதைத் தெளிவாக எடுத்து விளக்கியுள்ளார்.

தனியார் நிறுவனங்களின் தனிப் பெருஞ் சிறப்பை இத்துணைத் தெளிவாக விளக்கிக் கூறியுள்ள கல்வி அமைச்சர் அவர்களுக்கு நம் உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். மனம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கும் அதே நேரத்தில் இன்றியமையாத வேண்டுகோள் ஒன்றையும் விடுக்க ஆசைப்படுகிறோம். தனியார்

தொடக்கப் பள்ளிகளுக்கு அரசாங்கத்தால் அளிக்கப்படுகிற நிர்வாக மானியம், மிக மிகக் குறைவாக இருக்கிறது.

மாணவர்களிடமிருந்து கட்டணம் திரட்டும் உரிமை தனியார் பள்ளிகளுக்கு இருக்குமானால், பள்ளிக்கூட நிர்வாகச் செலவுக்குத் தேவையான தொகை முழுவதையும். பள்ளி நிர்வாகிகள், அந்தக் கட்டணத் தொகையிலிருந்து ஈடு கட்டிக் கொள்ளமுடியும். ஆனால் சென்ற பல ஆண்டுகளாகவே, இலவசக் கல்வித் திட்டம் நடைமுறைக்கு வந்துள்ள காரணத்தால், நிர்வாகச் செலவுக்குத் தேவையான தொகையை அவ்வழியில் பெற முடியவில்லை. இத்தகைய நிலையில் பள்ளிக் கூடத்தை நடத்துவதற்கு நியாயமாகத் தேவைப்படுகிற தொகை முழுவதையும் நிர்வாக மான்யமாகத் தந்து உதவ வேண்டியது அரசினரின் கடமை. ஆனால் அரசினரால், இலவசக் கல்வித் திட்டம் நடைமுறைக்கு வந்த காலத்திலிருந்து தரப்படுகிற நிர்வாக மானியத் தொகை, உண்மையில் ஆகிற நிர்வாகச் செலவில் மிக மிகச் சிறிய பகுதியாக மட்டுமே இருக்கிறது.

நிர்வாகச் செலவில் அரசினர் தருகிற சிறிய மானியம் நீங்கலாக எஞ்சியுள்ள தொகையை, தனியார் நிர்வாகிகள், எங்கிருந்து பெறுவது —எப்படிப் பெறுவது என்பது தெரியாமல், பத்து ஆண்டுகளுக்கு மேலாகவே, தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர்.

தனியார் பள்ளி நிர்வாகிகளுக்கு உள்ள இத் தவிப்பை—தத்தளிப்பை—செலவுக்கு ஏற்ற அளவு வரவு இல்லாமலிருக்கிற திண்டாட்டத்தை நீக்குவதற்கு ஏற்ற அளவு நிர்வாக மானியத்தை அவர்களுக்கு அளிக்க இன்றைய தமிழக அரசு முன்வர வேண்டும் என்பதே நம் பணிவான வேண்டுகோள்.

தனியார் பள்ளிகள் ஆற்றுகிற பணி சிறப்பற்றது—சீர் இல்லாதது என்பதாக நிலை இருக்குமானால் இத்தகைய வேண்டுகோளை நாம் விடுக்க மாட்டோம். ஆனால் தனியார் பள்ளிகள் ஆற்றுகிற பணி, சிறப்பு மிக்கது—செம்மை வாய்ந்தது—தெளிவு நிறைந்தது — தரம் மிகுந்தது என்று கல்வி அமைச்சர் அவர்களே அழகுபட எடுத்துக் கூறியுள்ளார்கள்.

சிறப்புமிக்க பணியாற்றுகிற தனியார் நிறுவனங்களுக்கு நியாயமான அளவு நிர்வாக மானியம் தருவதுதானே முறை ?

எனவேதான் நாம் மிக்க அன்போடும் பணிவோடும் அரசினரைக் கேட்டுக்கொள்கிறோம்—நிர்வாக மானியத்தைப் பொருத்தமான அளவுக்கு உயர்த்தித் தாருங்கள் என்று.

# ஐஸன்ஹாவர் வரலாறு

*

ஐஸன்ஹாவர் 1890-ம் ஆண்டு அக்டோபர் 14-ம் தேதி டேவிட் ஜே. ஐஸன்ஹாவருக்கும் ஐடா எலிஜபெத் அம்மையாருக்கும் மூன்ருவது மகனுகப் பிறந்தார். அவர்களுக்கு ஏழு மகன்கள். இரண்டாண்டுகளுக்குப் பிறகு குடும்பம் கான்ஸாஸ் மாநிலத்தில் அபிலீன் என்ற ஊரில் தங்கி வசிக்க லாயிற்று. அங்கு ஐஸன்ஹாவர் பொதுப் பள்ளிக்கூடங்களில் படித்தார். தம் உடன் பிறந்தவர்களுடனும் நண்பர்களுடனும் விளையாடினர். குடும்பப் பண்ணையில் பணி செய்தார்.

துவக்க காலப் பயிற்சியின் போது ஐஸன்ஹாவர் ராணுவப் பணிக்குச் செல்வார் என்ற அறிகுறியே இல்லை. உயர்நிலைப் பள்ளிப் படிப்பு முடிந்ததும் இரண்டு ஆண்டுகள் அவர் பண்ணை வேலைகள் செய்து வந்தார். யு. எஸ். கடற்படைக் கழகத்துப் புகுமுன் பரீட்சை எழுதும்படி நண்பர் ஒருவர் ஐஸன்ஹாவருக்கு யோசனை கூறினர். பரீட்சையில் தேறினர். ஆனல் வயது தாண்டிப்போனதை உணர்ந்தார். எனவே 1911-ல் வெஸ்ட் பாயின்ட் ராணுவக் கழகத்தில் சேர்ந்தார்.

வெஸ்ட் பாயின்டில் *1911*-ல் தேறிப் பட்டம் பெற்ருர். முதல் மூவரில் ஒருவராகத் தேறினர். டெக்ஸாஸ் மாநிலத்தில் ஸான் அன்டோனியோவில் இருந்த 19-வது காலாட் படையில் இரண்டாம் லெப்டினன்டாக உத்தியோகம் ஏற்ருர். அங்கு 18 வயதான மேமி ஜெனவா டௌட் என்ற பெண்மணியைச் சந்தித்தார். ஜான் ஷெல்டன் டௌட் என்பவரின் இரண்டாவது மகள் அவர். நான்கு மகள்கள் அவருக்கு. கௌராடோவில் இருக்கும் டென்வரில் அவர் செழிப்பு மிக்க வணிகராக இருந்தார். 1916 ஜூலை 1-ம் தேதி ஐஸன்ஹாவர் முதல் லெப்டினன்டு ஆன நாள் அன்று அவர்கள் மணம் செய்து கொண்டனர்.

"என் வாழ்க்கையிலேயே எனக்குக் கிடைத்த பெரும் அதிர்ஷ்டம் நான் மணம் செய்து கொண்ட பெண்தான்" என்று ஒரு சமயம் அவர் மேமியிடம் கூறினர்.

ஐஸன்ஹாவருக்கு இரண்டு மகன்கள் பிறந்தனர். முதல் டௌட் டுவைட். மூன்று வயதில் காய்ச்சல் கண்டு இறந்து போனர். இரண்டாவது மகன் ஜான் ஷெல்டன் டௌட் ஐஸன்ஹாவர் 1922 ஆகஸ்டு 3-ம் தேதி பிறந்தார். தந்தையைப் போல் அவரும் வெஸ்ட்பாயின்ட்பட்டம்பெற்றவர் வெள்ளை மாளிகையில் தந்தைக்குத் துணைக் காரியதரிசியாக வேலை பார்த்தார்.

முதலாவது உலகப் போரின் போது டுவைட்டி, ஐஸன்ஹாவர், பயிற்சி பெறும் டாங்கு துருப்பு களுக்குத் தளபதியாக இருந்தார். பனமா கால்வாய் மண்டலத்தில் அவர் பணியாற்றினர். அமெரிக்கா நெடுகிலும் பல்வேறு ராணுவத் தளங்களில் பணியாற்றியுள்ளார்.

## பதவி உயர்வு

ஐஸன்ஹாவருக்கு முதலில் பதவி உயர்வு மெதுவாகத்தான் இருந்தது. தமது திறமையை அவர் காட்டத் தொடங்கியதும் பதவி உயர்வும் வேகமாயிற்று. 1926-ல் கான்ஸாஸ் மாநிலத்தில் இருக்கும் ஃபோர்ட் லிவன்வொர்த் தில் உள்ள ராணுவ அதிகாரிகள் கல்லூரியில் 350 அதிகாரிகளில் முதல்வராக அவர் தேறிய போது அவர்பால் கவனம் அதிகரிக்க லாயிற்று.

1935-ல் ஐஸன்ஹாவர் ஃபிலிஃ பைன் சென்றார். ஜெனரல் டக் ளஸ் மெக் ஆர்தருக்கு உதவியாள ராகச் சென்றார். மெக் ஆர்தருக்கு சுதந்திர ஃபிலிப்பைன் ராணுவத் தை அமைப்பதற்கும், பயிற்சி அளிப்பதற்கும் பொறுப்பு கொடுக் கப்பட்டிருந்தது. ஃபிலிப்பைன் விமானப் படையைத் தோற்று விக்க ஐஹன்ஹாவர் உதவினர். இந்தத் தீவில்தான் அவர் விமானம் ஓட்டக் கற்றுக் கொண்டார்.

இரண்டாம் உலகப் போர் மூண்டதும் ஜெனரல் ஐஸன்ஹா வர் அமெரிக்காவுக்குத் திரும்பி வந்தார். 1941 டிசம்பரில் அமெ ரிக்கா இரண்டாம் உலகப் போரில் குதித்த போது ஐஸன்ஹாவர் யு. எஸ். மூன்ருவது படையின் தலைமை ராணுவ அதிகாரியாக இருந்தார். பேர்ல் துறை முகத்தை ஜப்பானியர் தாக்கிய பிறகு ஒரு வாரத்திற்குள் ஐஸன் ஹாவர் வாஷிங்டனுக்கு அழைக் கப்பட்டார். அங்கு ராணுவத் தலை வராக இருந்த ஜெனரல் ஜார்ஜ் மார்ஷல் கீழ் பணியாற்றினர்.

1942 மத்தியில் ஐஸன்ஹாவர் ஐரோப்பியப் போர் முகப்பில் யு.எஸ். தளபதியாகி விட்டார். அதே ஆண்டு நவம்பரில் வட ஆப்பிரிக்காவில் அமெரிக்கப் படை களுக்குத்தளபதியாகபோரிட்டார். சிசிலி, இத்தாலி படையெடுப்பை யும் அவர் தளபதியாக இருந்து நடத்தினர். 1943 டிசம்பரில் நேச நாடுகளின் வலுத் தாக்குதல் படைகளின் தலைமைத் தளபதி யானர். ஐரோப்பா மீது 1944 ஜூன் 6-ம் தேதி தொடங்கிய நேச நாடுகள் படையெடுப்பை ஐஸன்ஹாவர்தான் திட்டமிட்டு நடத்தினர்.

1945-ல் ஜெனரல் ஜார்ஜ் மார் ஷலுக்குப் பதிலாக ராணுவத் தலைவரானர் 1948 பிப்ரவரி வரை அப்பதவியில் இருந்தார். 1948-ல் நியூ யார்க் நகரில் இருக்கும் கொலம்பியாப் பல்கலைக் கழகத் தின் தலைவர் பதவியை ஏற்ருர். அமெரிக்காவில் இருக்கும் மிகத் தொன்மையான பல்கலைக் கழகங் களில் இது ஒன்று. 1950--ஆம்

ஆண்டு வரை இந்தப் பதவியில் இருந்தார். அந்த ஆண்டில் அவர் ஐரோப்பாவில் வட அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகளின் படைகளை அமைக்க நேசநாடுகளின் தலைமைத் தளபதியாக ஆனார்.

1948-ல் ஜனாதிபதி தேர்தல் இயக்கம் தொடங்குவதற்கு முன்பே ஐஸன்ஹாவர் வேட்பாளராக வரக்கூடும் என்று பரவலாகக் கூறப்பட்டது. ஆனால் அந்தச் சமயத்தில் நாட்டின் இந்த மிக உயர்ந்த பதவியில் தமக்கு அக்கரை இல்லை என்று ஐஸன்ஹாவர் கூறிவிட்டார்.

ஆயினும் நான்கு ஆண்டுகள் கழித்து அவர் ஜனாதிபதிபதவிக்குக் குடியரசுக் கட்சியின் நியமனத்தை ஏற்றார். அவர் வெகு எளிதில் வெற்றி பெற்றார். 1956-ல் மீண்டும் அவருடைய கட்சி அவரை நியமனம் செய்தது. மீண்டும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அமெரிக்காவின் வரலாற்றிலேயே மிக அதிகபட்ச மக்கள் வோட்டுகளை அவர் பெற்றார்—3 கோடி 55 லட்சம் வோட்டுகள்.

வரலாற்றில் ஜனாதிபதி ஐஸன்ஹாவருக்குப் பொன்னான இடம் உண்டு. ராணுவத் தலைவர் என்ற முறையிலும் ஜனாதிபதி என்ற முறையிலும் அவரைத் தெரிந்தவர்கள் அவரை மறக்க முடியாது. அவரை மறக்கும்படி அவர்கள் விடவும் மாட்டார்கள்.

—அமெரிக்கன் ரிப்போர்ட்டர்

*மந்திரி கூறுகிறார்*

## படிப்பவர் எண்ணிக்கை கூடுகிறது, நிதி வசதி குறைவு: விளைவு சீரழிவு

பள்ளிகளில் சேர்க்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை கூடுதலாகிறது. ஆனால் நிதி வசதியைப் பொறுத்த வரையில், நான்காவது திட்டத்தில் கல்வித் துறைக்கு அளிக்கப்பட்டுள்ள முன்னுரிமை திருப்திகரமாக இல்லை என்று, கல்வி அமைச்சர் பேராசிரியர் வி. கே. ஆர். வி. ராவ் இன்று கூறினார்.

நான்காவது திட்டத்தில் கல்வித் துறையில் முதலீடு ரூ. 802 கோடி. மொத்தத் தொகையில் இது 5.6 சதவிகிதம். இதற்கு முன்பு எல்லாத் திட்டங்களிலும் இருந்ததை விட இந்த விகிதம் குறைவு என்று மந்திரி கூறினார். கல்வி மந்திராலயத்திற்கான பார்லிமெண்ட் ஆலோசனைக் குழுவில் மந்திரி பேசினார்.

பள்ளிகளில் சேர்க்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு, ஆனால் குறைவான நிதி வசதி. இந்த நிலைமையின் விளைவாக போதனையின் தரமும், கல்வி வசதிகளும் சீரழிகின்றன என்று மந்திரி கூறினார்.

பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் எந்தக் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், நாட்டின் கல்வி அபிவிருத்திக்கு உதவவேண்டும் என்று மந்திரி கேட்டுக்கொண்டார்.

அமிர்தத்தைப் போலவே.

ஆஸ்பிரினும் அளவுக்கு மிஞ்சினால் நஞ்சு !

# ஆஸ்பிரின் ஜாக்கிரதை

[ எச். குட்மன், எம்.டி. ]

ஆஸ்பிரின் இப்போதெல்லாம் அதிகமாக உபயோகிக்கப் பட்டு வரும் மருந்துகளில் ஒன்று. எப்பொழுதெல்லாம் உடலுக்கு சற்றுக் கஷ்டமாகத் தோன்றுகிறதோ அப்பொழுதெல்லாம் இதில் ஒரு மாத்திரையை விழுங்கி விடும் பழக்கம் அநேகரிடம் இருக்கிறது. அதிலும் உங்களுக்கு வழக்கமாகச் சிகிச்சை செய்து வரும் டாக்டரே இரண்டு மாத்திரை உபயோகிக்கச் சொல்லிவிட்டால், அது நல்ல மருந்து தான் என்பதைக் குறித்து உங்களுக்குச் சந்தேகமே ஏற்படுவதில்லை.

ஆனால் ஆஸ்பிரினால் கெடுதி உண்டென்று உங்களுக்குத் தெரியுமா ? எப்போது என்று தெரியுமா ? அதை மிட்டாய் போல மிகுதியான அளவில் உட்கொள்ளும் போதும், டாக்டர் சொல்லாமல் நீங்களாகவே உபயோகிக்கும் போதும் தான், இப்படிச் சாப்பிடுவதினாலே சில சமயங்களிலே நீரிழிவு நோயாளிகளுக்கு சர்க்கரை சாப்பிட ஆசையுண்டாவது போல உங்களையும் அறியாமலே உங்களுக்கு ஆஸ்பிரின் தேவையானது போன்ற உணர்வும் ஏற்படுகிறது. ஆஸ்பிரின் சாப்பிட்டதினாலே வியாதிப் பட்டவர்களும், ஏன் செத்துப்போன கேஸ்களும் உண்டு.

சமீபத்தில் எனக்குத் தெரிந்த மூன்று சிறிய குழந்தைகளுக்கு ஆஸ்பிரினால் கெடுதி நேர்ந்ததென உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஒரு குழந்தை செத்தே போனது. இந்த மூன்று குழந்தைகளுக்கும் தாய்மார் ஆஸ்பிரினை, வலி எடுத்துக் குழந்தைகள் அழுத போதெல்லாம் கொடுத்து வந்திருந்தனர். சுகம் கிடைப்பதற்காகத் தான்! செத்துப் போன குழந்தைக்குத் தேவையான ஆஸ்பிரினை விடப் பத்து மடங்கு அதிகம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

ஆஸ்பிரினை உபயோகிக்கப் பழகி விட்டதில், இப்போதெல்லாம் அதை அநேகர் மிட்டாய் போன்று கெடுதல் செய்யாத பொருள் என்று நினைத்து வருகிறார்கள். சில தேகங்களுக்கு இப்படிச் சாப்பிடுவது ஆபத்தாகிவிடும்.

ஆஸ்பிரினால் ஒரு நோயாளி பின் வருமாறு கஷ்டப்பட்டதாகச் சொல்லுகிறார் : “நான் இரண்டு ஆஸ்பிரின் மாத்திரைகள் சாப்பிட்டு நாலு மணி நேரம் ஆவதற்

குள் உதட்டிலும் கண்களிலும் சிறிது வீக்கம் தோன்றியது. உடலில் பொடிப்பும் தொண்டைக் கம்மலும் தோன்றி உதடுகளையும் கண்களையும் அசைக்கக் கூடாமற் போய், இரண்டு மணி நேர சிகிச்சைக்கு அப்புறம் சற்று குணமடைந்தேன்.'' ஐந்து கிரேன் சாப்பிட்ட ஒருவர் முகமெல்லாம் வீங்கி நாக்கு உள் வாங்கி வெளியே நீட்ட முடியாமல் அவஸ்தைப் பட்டார். இன்னமும் இரண்டு அல்லது மூன்று மாத்திரை அதிகம் சாப்பிட்டிருந்தால் "யமப் பட்டணத்திற்கு'' நேரே டிக்கட் வாங்கியிருப்பார். தற்கொலை செய்து கொள்ளக் கூட ஆஸ்பிரின் மாத்திரைகள் தற்போது உபயோகமாகின்றன.

அமெரிக்க ஐக்கிய மாகாணத்திலே எட்டுக் கோடி ஐந்து கிரேன் ஆஸ்பிரின் மாத்திரைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. *1929*-லிருந்து இதன் உபயோகம் உலகம் முழுவதும் பரவி வருகிறது. நம் நாட்டிலே இப்படிக் கணக்குப் பார்க்கவும் ஆஸ்பிரினின் அபிரிமிதமான உபயோகத்தின் விளைவுகளைக் குறித்து மக்களுக்குத் தெரியப்படுத்தவும் வேண்டும்.

ஆளைக் கொல்லுவதற்கு ஆஸ்பிரினிலே என்ன தான் இருக்கிறது என்பது உங்கள் கேள்வி. அதைத் தான் சொல்லப் போகிறேன். ரசாயன சாஸ்திரப்படி, ஆஸ்பிரின் அஸட்டிஸாலிஸிலிக் ஆஸிட் தான். ரசாயன ஆய்வுக் கூடங்களிலே அபூர்வமாக உபயோகிக்கப்படுவதொன்று. சிகிச்சைக்கு இதை உபயோகப்படுத்தலாம் என்று ஐம்பது வருஷங்களுக்கு முன் கண்டு பிடித்தார்கள். (*1899*-ம் வருஷத்திலே). அது ஒரு வலி கொல்லி தான். வலியை நிவாரணம் செய்யவே செய்யாது. தலை வலி, தசைகளில் ஏற்படும் வலி இவை தோன்றுதபடி செய்யும். இப்படி வலி தோன்றுது போய் விடுவதால், அநேகர் ஆஸ்பிரினை விழுங்கி விட்டு சிகிச்சை செய்து கொள்ளாமல் இருந்து விட முயற்சிக்கிறார்கள். இதனால் திடீரென்று இரத்தத்தின் வேலையை ஆஸ்பிரின் தடை செய்யும் போது இரத்தப் பெருக்கு ஏற்பட்டு, ஆபத்து உண்டாகி விடுகிறது. இரத்தம் கெட்டியாவதை ஆஸ்பிரின் தடுக்கிறது. இந்தக் காரணங்களினால் தான் வீக்கம், நாக்கு உள் தள்ளுதல், இரத்தம் கெடுதல் முதலியவை ஏற்பட்டு, சடுதி மரணங்கள் சம்பவிக்கின்றன.

டாக்டர் உத்தரவின்றி, அளவுக்கு அதிகமாக உபயோகிக்கையில் தான், இவ்விளைவுகள் ஒருவருடைய உடலின் ஆரோக்கிய நிலையைப் பொறுத்து ஏற்படுவதுண்டு.

ஆஸ்பிரினை வலியைப் போக்கிக் கொள்ள உபயோகிக்கையில் தடை எதுவுமில்லை. ஆனால் கூடுமான வரை குறைவாகவும் டாக்டரிடம் கேட்டும் உபயோகியுங்கள்.

(1) குழந்தைகளுக்கு டாக்டரிடம் கேட்டுத்தான் கொடுக்கும் பழக்கம் ஏற்படுத்துங்கள். குழந்தைகள் கைக்கு எட்டாத இடங்களில் உங்கள் ஆஸ்பிரின் சப்ளையை ஒதுக்கி வையுங்கள். அதி

தும் இனிப்புருண்டைகளாக ஆஸ்பிரின் இருந்தால், அதைப் பூட்டியே வையுங்கள்.

(2) வயது வந்தவர்களும் கூட டாக்டரிடம் கேட்டு அல்லது எந்த அளவில் தான் ஆஸ்பிரின் உபயோகிக்கலாம் என்றறிந்து டோஸைக் குறைத்துச் சாப்பிட்டு வாருங்கள்.

(3) ஆஸ்பிரின் உங்கள் தேகத்திற்குச் சேருவதில்லை என்று அறிந்தால், யாரும் சும்மா தந்தால் கூட வேண்டவே வேண்டாமென்று ஒதுக்கி விடுவதுடன், அது ஏன் உடம்பில் சேருவதில்லையென்று டாக்டரிடம் கேளுங்கள்.

(4) ஆஸ்பிரின் உபயோகிக்க வேண்டிய ஒரு சிறு அளவு உபயோகித்துப் பலன் தெரியாவிட்டால்உடனே டாக்டரைப் போய்ப் பாருங்கள்.

(5) டாக்டரிடம் சிகிச்சைக்காகப் போகும் போது, ஆஸ்பிரின் சாப்பிட்டதை ஒளித்து வைக்காமல் சொல்லி விடுங்கள்.

கடைசியாக, எடுத்ததற் கெல்லாம் இப்படி வலி கொல்லி மாத்திரைகளை விழுங்கும் பழக்கத்தை ஒழித்தே தீருங்கள். ஏனெனில் ஏற்படும் தலைவலி காற்றோட்டமில்லாத அறையில் வேலை செய்வதாலோ, கண்களுக்கு ஓய்வு கொடுக்காததாலோ இருக்கலாம்.

—" நல்வழி "


## ஏஜெண்டுகள் தேவை

தமிழ்நாடு, தாலுக்கா அல்லது ஜில்லா வாரியாக எய்டட் ஆரம்பப் பள்ளிகள் Elementary Schools, நடுத்தரப் பள்ளிகள் Middle Schools, உயர்நிலைப் பள்ளிகள் High Schools, தலைமை ஆசிரியர்கள், நிர்வாகிகள் இவர்களைச் சந்தித்து நாங்கள் வெளியிட்டுள்ள பாடப் புத்தகங்களை வைக்கும்படி சிபார்சு செய்து ரூ. 2,000-க்குக் குறையாமல் ஆர்டர் வாங்கி அனுப்ப அனுபவமுள்ள ஏஜெண்டுகள் தேவை. அனுபவமுள்ள ஆசிரியர்கள் நபர்கள் மனுசெய்து கொள்ளவும். தக்க ஊதியம் உண்டு. மற்ற விவரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

*மானேஜர்,*

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்,

*ஆரம்பக்கல்வி நிலையம்*

*94-95, புதுத்தெருவு, மண்ணடி, சென்னை-1.*

# தமிழக அரசு ஊழியருக்கு ரூ. 2,000 வரை திருமணக் கடன்

தமிழக அரசு கெஜட் பதிவு பெற்ற ஊழியர்களும், கெஜட் பதிவு பெருத ஊழியர்களும் (கடைநிலை ஊழியர் உட்பட) திருமணம் செய்து கொள்வதற்கும் அவர்களது மகன் மகள் திருமணங்களுக்கும் கடன் வழங்க அரசு அனுமதித்துள்ளது.

இத்திட்டம் நேற்று முதல் அமுலுக்கு வந்தது. முதலில் இது 3 ஆண்டுகளுக்கு அமுல் நடத்தப்படும். பிறகு இது புனராலோசிக்கப்படும்.

அரசு ஊழியர்களே திருமணம் செய்து கொள்ளுவதாஞல் அவர்களது தகப்பஞரோ அல்லது தாயோ சர்க்கார் வேலையில் இருந்தால் அவர்களுக்கு திருமணக் கடன் அளிக்கப்பட மாட்டாது.

அரசு ஊழியர்களது 15 மாத சம்பளமோ அல்லது ரூ. 2,000 இதில் எது குறைவாகவுள்ளதோ அத்தொகை திருமணக் கடஞக வழங்கப்படும். கடனுக்கு மனுப் போடும் காலத்தில் 5 வருடங்களுக்குக் குறையாமல் சர்க்காரில் வேலை பார்த்தால்தான் இக் கடன் பெறத் தகுதி உண்டு. விசேஷ லீவில் செல்லும் அரசு ஊழியர்கள் இக் கடனுக்கு மனுச் செய்து கொள்ளலாம். அரசு ஊழியரின் மனைவி அல்லது கணவன், தாய் அல்லது தந்தையோ சர்க்கார் ஊழியராக இருந்தால் இவர்களில் யாராவது ஒருவருக்குத்தான் விவாகக் கடன் தரப்படும்.

திருமணக் கடன் பாக்கியிருந்தால் மீண்டும் அரசு ஊழியருக்குக் கடன் தரப்பட மாட்டாது. அரசின் நிதி நிலைமைக்கு ஏற்பவே கடன் அனுமதிக்கப்படும். விவாகத் தேதி 5 மாதத்திற்கு முன்பு கடனுக்கான மனுக்கள் ஏற்கப்படமாட்டா.

சஸ்பெண்டு செய்யப்பட்ட அல்லது கடும் குற்றச்சாட்டுகள் விசாரணையிலிருக்கும் சர்க்கார் ஊழியரிடமிருந்து மனுக்கள் ஏற்கப்படமாட்டா.

பிராவிடெண்ட் நிதிக் கடனுக்கு வசூலிக்கப்படும் வட்டி விகிதத்திலேயே திருமணக் கடனுக்கு வட்டி வசூலிக்கப்படும்,

விவாகம் நடக்கும் தேதிக்கு இரண்டுமாதங்களுக்கு முன்பு இக் கடன் தரப்படும்.

## 60 மாத தவணை மூலம் வசூல்

60 மாத தவணைகளில் கடன் தொகை திருப்பி வசூலிக்கப்படும். அரசு ஊழியர் ஓய்வு பெறும் காலத்திற்கு முன்பே கடனையும், வட்டியையும் திருப்பி வசூலிக்கப்படும். அசல் தொகை வசூலிக்கப்பட்டவுடன் வட்டித் தொகை வசூல் துவங்கும்

கடன் வழங்கப்பட்ட 3 மாத காலத்திற்குள் எந்தக் காரியத்திற்காக இக்கடன் வழங்கப்பட்டதோ அதற்குச் செலவிடப்படாவிடில் ஒரே தவணையில்வட்டியுடன் சேர்த்து திருப்பித்தர வேண்டும். கடன் பணத்தைப் பயன்படுத்த 3 மாதத்திற்குமேல் அவகாசம் தரப்பட மாட்டாது.

சொந்த ஜாமீனோடு, இன்னொரு நிரந்தர அரசாங்க ஊழியரின் ஜாமீன் பேரில் கடன் கொடுக்கப்படும்.

தவிர்க்க முடியாத காரணத்தால், திருமணத்திற்கு முன்பாக கடனை அளிக்கவில்லை அல்லது பெற முடியவில்லை என்றால், திருமணம் முடிந்த பிறகு கூட அனுமதிக்கப்பட்டுள்ள கடன் தொகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

திருமணம் முடிந்த அடுத்த மாதத்திலிருந்தோ அல்லது கடன் அனுமதிக்கப்பட்ட மூன்றும்மாதத்திலிருந்தோ எது முதலில் வருகிறதோ அம்மாதத்திலிருந்து சம்பந்தப்பட்ட ஊழியரின் சம்பளத்திலிருந்து கடன் மாதத் தவணைகளில் பிடித்துக் கொள்ளப்படும். கடனைத் திருப்பித் தர ஆரம்பிப்பதற்குச் சாதாரணமாக மேற்கொண்டு அவகாசம் தரப்படாது.

கடன் தொகை முழுவதையும் திருப்பிச் செலுத்துவதற்குள், கடன் வாங்கிய அரசு ஊழியர் இறந்து விட்டால், கடனில் பாக்கியிருக்கும் தொகையும் அதற்குரிய வட்டித் தொகையும் அந்த ஊழியரின் கிராஜுவிடி தொகையிலிருந்து பிடித்துக் கொள்ளப்படும்.

—“தினமணி”

# கல்வித்துறைச் செய்திகள்

## பரீட்சை முறை மாறவேண்டும் என்று பிரதம கல்வி அதிகாரி கூறுகிறார்

கோவை மார்ச் 19—மாணவர்களுடைய திறமையை கண்டறிவதற்கு ஆண்டு முடிவில் ஒரே ஒரு பரீட்சை மட்டும் நடத்தும் தற்போதைய முறையை மாற்ற வேண்டும் என்றும், ஒரு வருட காலப் படிப்பில் பல நிலைகளில் மாணவர்களுடைய திறமை பற்றிக் கண்டறிய வேண்டும் என்றும். மாதப் பரீட்சைகள் நடத்தலாம் என்றும். தமிழ்நாடு அரசாங்க பிரதம கல்வி ஆலோசகர் என். டி. சுந்தரவடிவேலு கூறினார்.

கோவை மாவட்ட ஆசிரியர்கள் சங்கத்தின் 43வது ஆண்டுவிழாவை அவர் இன்று தொடங்கி வைத்தார். பரீட்சைகள் நடத்துவதன் நோக்கம், ஏராளமான மாணவர்களை மேல் வகுப்புக்கு மாற்றாமல் தங்கவைப்பதாக இருக்கக்கூடாது என்று அவர் கூறினார்.

உயர் நிலைக் கல்வியையும் இலவசம் ஆக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த வாய்ப்பை அதிகமான அளவில் சிறுவர்களும், சிறுமிகளும் பயன்படுத்திக்கொள்வார்கள் என்று தாம் நம்புவதாக சுந்தரவடிவேலு கூறினார்.

பிரதம கல்வி அதிகாரி மேலும் கூறியதாவது: சர்ச்சைக்கு இடமான மொழிப் பிரச்னை மற்றும் இதர பிரச்னைகளை பெரியவர்களிடம் விட்டுவிட்டு, குறுக்கிடு இல்லாத வகையில் படிப்பில் மாணவர்கள் 15 ஆண்டுகளுக்குத் தங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும். அரசியல் பிரச்னைகளைப்பற்றி மாணவர்கள் கவலைப்பட்டுக் கொள்ளக் கூடாது.

ஆசிரியர்கள் நல நிதிக்கு ஆசிரியர்களையேநன்கொடைகள் திரட்டுமாறு கூறக்கூடாது. ஒவ்வொரு மாவட்டத்திலும் வசூலில் பெரும் பகுதியை தேவைப்படும் ஆசிரியர்களுக்கு உதவுவதற்காக மாவட்டத்திலேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையில் நியாயம் உள்ளது. இந்த கோரிக்கைகளை அரசாங்கம் தக்க முறையில் பரிசீலனை செய்யும் என்று தாம் நம்புவதாக பிரதம கல்வி அதிகாரி கூறினார்.

கோவை மாவட்ட ஆசிரியர்கள் சங்கத்தின் முயற்சியால் ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிடப்படும் "கல்விக் குறள்" என்ற பத்திரிகையை அவர் வெளியிட்டார். சங்கத் தலைவர் ஜி. ஆர். தாமோதரன் வரவேற்றார்.

—"தினமணி"

# மாணவர்களும் அரசியலும்

நாவலர். இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., எம்.எல்.ஏ.,
( முன்னாள் தொழில், கல்வி அமைச்சர். )

❊

மாணவரது வேலை நிறுத்தம் தொழில் ஸ்தாபனங்களில் நடை பெறும் வேலை நிறுத்தம் போன்ற தாகாது. மாணவர்களது வேலை நிறுத்தத்தால் பாதகமடைவது மாணவர்தாம் என்பதை அனேகர் உணர வேண்டும். மாணவர் குறைகள், புகார்கள், சம்பந்த மான பிரச்சினைகளைப் பரிசீலிக்க மாணவர் பிரதிநிதிகள் கொண்ட கோர்ட்டுகளை கல்வி ஸ்தாபனங் களில் நிறுவுவதால் பயன் ஏற்படும்.

கல்வி-ஸ்தாபனங்களை மூடும்படி யான நிலைமையை மாணவர்கள் உண்டாக்காமலிருக்க வேண்டும். கல்வியின் கவுரவத்தையும், ஒழுங் கையும் காப்பாற்றி வர வேண்டும். அரசியல் விவகாரங்களை மாணவர் கள் கவனித்தலும் புரிந்து கொள்ள முயலுதலும் சரியான வையே. ஆனால், படிப்பை விட்டு அரசியலில் குதிப்பது பெருந் தீங்காகி விடும்.

நாட்டில் கல்விச் செல்வம் வளர்ந்தால் மற்றைய செல்வங்கள் எல்லாம் பன் மடங்கு தானே வளரும் என்பதைக் கருத்தில் கொண்டு தான் தமிழக அரசும் கல்விக்காக மிகப் பெருவாரியான பணத்தைச் செலவழித்து வரு கிறது. 1968-69 ஆம் ஆண்டிற் காக 248 கோடி ரூபாய் அளவுக்குச் செலவு செய்கின்ற தமிழக அரசு, பொதுக் கல்விக்காக மட்டும் ரூபாய் 56 கோடி ஒதுக்கி யுள்ளது. கல்விக்காக மேலும் பல கோடி ரூபாய்கள் செலவழித் தும், எல்லாரும் கல்வி கற்றிருக் கிறார்கள் என்ற நிலையை நாம் இன்னும் காண முடியவில்லை. இன்றைய நிலையில், நூற்றுக்கு நாற்பத்திரண்டு பேர்கள் தாம் எழுதப் படிக்கத் தெரிந்தவர் களாக இருக்கிறார்கள். இன்னும் ஐம்பத்தெட்டு பேர் எழுதப் படிக்கத் தெரியாத தற்குறிகளா கத்தான் இருந்து வருகிறார்கள். கற்றவர்களுக்கும், கல்லாதவர் களுக்கும் இடையே இருக்கும் பெரிய இடை வெளியை விரைவில் போக்க, இந்தத் தலைமுறையைச் சார்ந்த படித்தவர்கள் அனைவரும் பெரும் பொறுப்பை ஏற்று, கடு மையாக உழைத்து, நீங்காக் கடமையை ஆற்ற வேண்டியவர் களாக இருக்கின்றோம்.

பாராளுமன்ற ஜனநாயக முறையை விரும்பி ஏற்றுக் கொண் டுள்ள நமது நாட்டில், கருத்து வேறுபாடுகளுக்கு முழு மதிப்பு அளித்து, ஜனநாயகப் பண்பை வளர்க்க ஒவ்வொரு குடிமகனும் கடமைப்பட்டிருக்கிறான். ஜன நாயகத்தின் முழுப் பொருளையும் உணர்ந்து, அதைப் பிறருக்கும்

கின்றனவே யல்லாமல், சட்டத்தின் துணை கொண்டு அணுகும் போது அவை அடங்கவில்லை. அதன் பிறகு இருக்கும் வலிமைப் பற்றி சுவாமி விவேகானந்தர் திறக்கப்பட முடியாத கதவுகளை அன்பு திறக்கிறது: அண்டத்திலுள்ள இரகசியங்களுக்கு எல்லாம் அன்புதான் வழியாக அமைகிறது என்கிறார்".

மாணவர்களுக்கும் அரசியலுக்கும் இருக்கும் தொடர்பு, இருக்க வேண்டிய தொடர்பு பற்றிப் பல கருத்துக்கள் பலராலும் பரிமாறப்பட்டிருக்கின்றன. மாணவர்களுக்கும் அரசியலுக்கும் எவ்வித தொடர்பும் இருக்கக் கூடாது என்று ஒரு சாராரும், மாணவர்களுக்கும் அரசியலுக்கும் எல்லாவித தொடர்பும் இருக்க வேண்டும் என்று மற்றொரு சாராரும், மாணவர்கள் அரசியலை அறிந்து கொள்ளத்தான் வேண்டும். ஆனால், அவர்கள் நேரிடையாகப் பங்கு கொள்ளக் கூடாது என்று மூன்றாவது சாராரும் கூறிவருகின்றனர். மாணவர்கள் அரசியலில் நேரிடையாக ஈடுபட்டுத் தங்களுடைய நேரத்தையும், நினைப்பையும், உழைப்பையும் அரசியலுக்குச் செலவிட்டுப் படிப்பை பாழாக்கிக் கொள்வது மாணவர்களின் எதிர்காலத்தைப் பெரிதும் பாழ்படுத்திவிடும். என்னைப் பொறுத்தவரையில்நான் மூன்றாவது சாராரின் கருத்தைத்தான் வலியுறுத்தி வருகிறேன்.

ஒவ்வொருவரும் தங்கள் அறிவிலும், ஆற்றலிலும் நம்பிக்கை வைத்துக் கடுமையாக உழைத்து, உண்மையைக் கடைப்பிடித்து, நேர்மையை நிலைநாட்டி, நாணயத்தோடு பணிபுரியத் தலைப்பட்டால், அப்படிப்பட்ட உழைப்புக்கு உறுதியான பலன் கிடைக்கும் என்பதை அண்ணல் காந்தியடிகள் அடிக்கடி வற்புறுத்தி வந்துள்ளார்கள். அவருடைய சிறந்த கருத்தை ஏற்றுச் செயல்பட முயல்வது, மாணவர்களுக்குச் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

—நல்வழி

20

# அறிவமுதம்

தொகுப்பு:—'நாஞ்சில் ஷா'

●

ஒரு மனிதன் தன்னுடைய உடலைத் தவிர வேறு எந்த உடலிலும் புகுந்து வாழ விரும்ப மாட்டான். அதுபோல, ஒரு நாடு, மற்றொரு நாட்டின் கீழ் அடிமைப்பட்டு வாழ விரும்புவதில்லை.

—காந்தியடிகள்

நீ பொது வாழ்வின் முன்னணியில் இருக்க விரும்புகிறாயா? ஆம் எனில், நீ அந்த நிலையை, பிறரால் இகழப்படுவது என்னும் விலையைக் கொடுத்துத் தான் வாங்கியாக வேண்டும்!

—ஸ்விப்ட்

ஒவ்வொரு மனிதனுக்கும், அவன் விரும்புகிறபடி யெல்லாம் நடந்து கொள்ளும் சுதந்திரம் தாராளமாக உண்டு. ஆனால் ஒன்று, அப்படி அவன் நடந்து கொள்ளுகிறபோது. மற்றவர்களின் சுதந்திரத்தை அவன் மிதித்துத் துவைக்காமல் இருக்க வேண்டும். அவ்வளவுதான்.

—ஸ்பென்சர்

மலர்களைச் சுற்றி மணம் கமழும், அதுபோலத்தான், செயற்கரிய செயல்களைச் சூழ்ந்து, புகழ் திகழும்!

—சாக்ரடீஸ்

பாவத்திற்குப் பயந்து திருடாதவனும், காவலுக்குப் பயந்து திருடாதவனும், உதைக்குப் பயந்து திருடாதவனும், மரணத்திற்குப் பயந்து திருடாதவனும் ஒரே வித யோக்கியதை உடையவனே யாவான்.

—பெரியார் ஈ. வெ. ரா.

மனிதன் ஒரு செடிதான். அதுவும் மிகவும் பலவீனமான செடி. ஆனால் அவன் சிந்திக்கத் தெரிந்த செடி. அதுதான் அவனுக்கும் மற்ற செடி கொடிகளுக்கும் உள்ள வேறுபாடு.

—பாஸ்கல்

இலட்சியப் பாதையிலே இளநீர் கொடுப்போர் நன்றிக்குரியோர். இதயம் நோகப் பேசுவோர் பரிதாபத்திற்குரியோர். பாதையின் பயணத்தின்போது பாபிகளின் துரோகம் தொட்டுப் பட்டுப் போவோர் தம் அனுதாபத்திற்குரியோர்,

—அறிஞர் அண்ணா

# கல்வி முறையை முழுவதும் திருத்தியமைக்க வேண்டும் :

●

## குஜராத் துணைவேந்தர் உரை

*

தற்போதைய உயர்கல்வி முறை மாணவர்களுக்குப் போதுமான அறிவையும் ஊட்டுவது இல்லை. படித்தால் வேலை கிடைத்துவிடும் என்ற பாதுகாப்பு உணர்ச்சியையும் ஏற்படுத்துவது இல்லை. எனவே இன்றைய உயர்கல்வி முறை முழுவதும் திருத்தி யமைக்கப்பட வேண்டும் என்று குஜராத் சர்வகலாசாலை துணைவேந்தர் உமா சங்கர் ஜோஷி இன்று கூறினார்.

பெங்களூர் சர்வ கலாசாலை நான்காவது பட்டமளிப்புவிழாவில் அவர் இவ்வாறுஉரை நிகழ்த்தினார். சமூகத்தில் பொறி நுட்பத்துறை அபிவிருத்தியால் மனித உறவுகளின் மதிப்பு குறையக் கூடிய அபாயம் பற்றியும் அவர் எச்சரித்தார். உறவுகள், ஒருவரை யொருவர் சார்ந்திருத்தல் ஆகிய வற்றால் அடைவதே மனித வாழ்க்கை. பொறி நுட்பத் துறையின் வளர்ச்சி இதையே அபாயத்தில் ஆழ்த்தி விடக் கூடாதென்று உமா சங்கர் ஜோஷி கூறினார்.

என்ஜினியர்களிடையே நிலவும் வேலையில்லாத் திண்டாட்டம் பற்றி அவர் பிரஸ்தாபித்தார். மேலும் மேலும் நவீனமடைந்து வரும் சமூகத்தை யொட்டி கல்வி முறை நவீனமாக்கப்பட வில்லை என்பதை அது காட்டுகிறது என்று அவர் குறிப்பிட்டார். எனவே புதிய முன்னேற்றங்களுக்கும், தேவைகளுக்கும் ஏற்ப பாட முறைகளை மாற்றியமைப்பதற்கு சர்வகலாசாலைகளும், போர்டுகளும் செயல்பட வேண்டும் என்றார்.

பாட முறைகளில் மட்டுமின்றி பரீட்சை முறை, ஆசிரியர் மாணவர் உறவு, நிர்வாக அமைப்பு ஆகியவற்றிலும் மாறுதல் ஏற்பட வேண்டும். ஆற்றல் மிகுந்த ஒரு சர்வகலாசாலை தனது ஸ்திரத் தன்மை, ஒருமை ஆகியவற்றுக்கு ஊறு இல்லாமல் அத்தகைய மாறுதலுக்குத் தொடர்ந்து தன்னைச் சரிப்படுத்திக் கொள்வதற்கான நுணுக்க முறைகளை அமைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், சிந்தனையாளர்கள், சமூகத் திட்டம் வகுப்பவர்கள், கல்வி நிபுணர்கள் ஆகியவர்கள், அழிவு ஏற்படுவதற்கு முன்பாக, ஒன்றாக உட்கார்ந்து நமது கல்வி முறை அமைப்பில் உடனடியாகத் தேவைப்படும் மாறுதல்களை வகுக்க வேண்

டும் என்று அவர் கருத்து தெரிவித்தார்.

கல்வித் துறையில் அரசியல்வாதிகளின் நிர்ப்பந்தங்கள், இருக்கின்ற குழப்பத்தை மேலும் அதிகமாக்கும் என்று உமா சங்கர் ஜோஷி எச்சரித்தார். மாணவர்களுடைய நலனைவிட தங்களுடைய விவகாரமே அவர்களுக்கு பிரதானமாக இருக்கும். இது தான் இந்த அரசியல்வாதிகளிடம் உள்ள கஷ்டம். ஆட்சி அதிகாரத்திற்கு உதவும் ஒரு கருவி கல்வி என்பது அவர்கள் கண்ணோட்டமாக இருக்கும்.

அரசியல் கட்சிகள் ஒன்றோடொன்று போட்டியிட்டுக் கொண்டு கல்வி விஸ்தரிக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தும். ஆனால், படித்து விட்டு வேலையில்லாதவர்கள் இருக்கிறார்கள். வேலையில்லாதவர்களின் கூட்டத்தைத் தாங்கள் அதிகப்படுத்தப் போகிறோம் என்று மாணவர்கள் கருதுகிறார்கள். இவற்றின் விளைவால் கிளர்ச்சிகள் ஏற்படும் என்பதையும் அரசியல்வாதிகள் அறிய வேண்டும் என்றார் குஜராத் சர்வகலாசாலை துணை வேந்தர்.

முறையான நூலகம், பரிசோதனைக் கூடம், ஹாஸ்டல் வசதிகள் முதலியவை இல்லாத நிலைமை, சம்பளக் கட்டணங்களில் உயர்வு, பரீட்சைகள் நடத்துவது சம்பந்தமான பிரச்னைகள் ஆகியவை மாணவர்களின் கொந்தளிப்புக்குச் சில காரணங்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

ஆசிரியர்-மாணவர், அதிகாரிகள்-மாணவர் ஆகியவர்களிடையே தொடர்பு இல்லாமையே பிரதான காரணம் என்றார் அவர். மாணவர்கள் தங்கள் மனம் திறந்து விஷயத்தைப் பற்றி விளக்குவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப் படாததால் சுலுவாக தீரக் கூடிய விஷயம் மோசமாகிறது. பிடிவாதமான போக்குகள் நிலவுகின்றன.

அத்தகைய சந்தர்ப்பங்களில் தான் அரசியல்வாதி நுழைகிறார். நிலைமையைக் கட்சி நலனுக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயற்சிக்கிறார் என்று உமா சங்கர் ஜோஷி கூறினார்.

அறிவைத் தேடும் முயற்சியில் மாணவரின் பங்கு மிகவும் குறைவாக இருக்கிறது என்று அவர் கூறினார். கல்வி என்றால் அவ்வப்போது சில மணி நேரம் கல்லூரிக்குப் போவதைத் தவிர வேறெதுவும் இல்லை என்று தோன்றுகிறது. தற்போதைய பரீட்சை முறையே இதற்குப் பெருமளவில் காரணம் என்று தாம் கருதுவதாக அவர் கூறினார். படிப்பில் மாணவர் தம்மை ஆட்படுத்திக் கொள்ள செமஸ்டர் முறையைப்புகுத்துவது உதவக் கூடும் என்று அவர் யோசனை தெரிவித்தார்.

இளைஞர்கள் என்ற கப்பல் தற்போது சுக்கான் இல்லாமல் இருப்

பது போலத் தோன்றுகிறது என்று அவர் கூறினர். என்ருலும் கஷ்டப்பட்டு சம்பாதித்த அரசியல் சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டிய புதிய கடமையை வெகு விரைவில் இளைஞர்கள் உணர்வார்கள் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். மாணவர்கள் புதிய சவாலை இனங்கண்டு கொண்டு சக்தியுடன் அதைச் சமாளிப்பார்கள் என்றும், அவர்களால்தான் அது இயலும் என்றும் அவர் கூறினர்.

''பொறிநுட்பத் துறை நாகரிகத்தின் அபாயங்கள்'' பற்றி அவர் பிரஸ்தாபித்தார். மனிதர்களைத் தனிமைப்படுத்திப் பிரிப்பதற்கு அது முயல்கிறது என்ருர் அவர். அதற்கு உதாரணமாக 1965-ல் நியூயார்க்கில் நடந்த ஒரு சம்பவத்தை அவர் குறிப்பிட்டார்.

நியூயார்க்கில் ஏதோ கோளாறினுல் மின்சாரம் திடீரென்று நின்று விட்டது. ஆங்காங்கு நடவடிக்கைகள் தடைப்பட்டன. எல்லோரும் திண்டாடினுர்கள். அந்த நேரத்தில்தான் ஒரு குடும்பத் தலைவி அவருடைய அண்டை வீட்டுக் கதவைத் தட்டினுர். ''உங்கள் குழந்தைக்கு என்னுல் சிறிது பால் தர முடியும்'' என்று கூறினர். அண்டை வீட்டு மாது மகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்டார். மற்ருெரு இடத்தில் மெழுகு வர்த்தியை ஒருவர் நீட்டினுர். அடுத்தவர் அதை நன்றியுடன் பெற்றுக் கொண்டார்.

அது வரையில், அண்டை வீட்டுக்காரர்களான அவர்கள் ஒருவருக்கொருவர் உதவுபவர் என்ற முறையில் வாழ்ந்தது இல்லை. அன்று சின்னஞ்சிறு காரியங்கள் மூலம் அவர்களிடையே தொடர்பும், நெருக்கமும் ஏற்பட்டன. மின்சார சக்தி மறுபடி வந்ததும் அந்த உறவு மீண்டும் துண்டிக்கப் பட்டு விட்டது. ''இந்த மாதிரி அடிக்கடி நடந்தால் பரவாயில்லையே'' என்று ஒருவர் கூறியதில் வியப்பில்லை.

மனிதன் பல நெருக்கடிகளை சமாளித்திருக்கிறுன். தற்போதைய நெருக்கடியையும், (பொறிநுட்பத்துறையை மீறி அல்ல) அதன் உதவியோடு, சமாளிப்பதற்கான சக்தியை மனிதன் பெறுவான் என்று உமாசங்கர் ஜோஷி கூறினர்.

—''தினமணி''

## சிறுவர் கலைக்களஞ்சிய வெளியீடு :

# ஆசிரியர், பெற்றோர் பிடி தளர்வது குறித்துக் கிரி அவர்களின் வருத்தம்

### தாய்மார்களின் பொறுப்பைத் துணைத்தலைவர் வலியுறுத்துகிறார்

சிறுவர் கலைக்களஞ்சிய முதல் தொகுதியை இன்று உப ராஷ்டிர பதி திரு வி. வி. கிரி வெளியிட்டார். அப்போது அவர் நிகழ்த்திய உரையின் சுருக்கம் வருமாறு :—

''தமிழில் சிறுவர் கலைக்களஞ்சியம் வெளியிடும் முயற்சி மேற்கொண்டிருப்பதற்காக எனது மதிப்பிற்குகந்த நண்பர் அவினாசிலிங்கத்தைப் பாராட்டுகிறேன். உடல், உள்ளம், அறிவு, அறநெறி ஆகிய எல்லாவற்றிலும் குழந்தைகள் வளம் பெற வேண்டியதன் தேவையை நான் எப்போதும் வலியுறுத்தி வந்திருக்கிறேன். குழந்தைகள் நலனுக்காக இந்தத் திட்டம் உண்மையிலேயே குழந்தை வளர்ச்சியில் மிக முக்கியமான அம்சமாகும்.

தமிழ் அகாடெமி தமது ஸ்தாபகரின் திறமையான தலைமையில் மேன்மேலும் வலுப்பெற்று வந்திருக்கிறது. அகாடெமியின் முன்னேற்ற வரலாற்றில் குழந்தைகள் கலைக் களஞ்சியம் ஐயத்துக்கிடமின்றி முக்கியமான தொரு நிகழ்ச்சியாகும்.

தாய்மாரிடத்தில் நாங்கள் பெற்ற பயிற்சி இன்றைய இளைஞர்களிடையே காணப்படவில்லை என்றதொரு கருத்து நிலவுகிறது. எம்முடைய தலைமுறையைச் சேர்ந்தவர்களுக்கு நமது அன்னையரிடமிருந்து முழுப் பயிற்சி கிடைத்தது. ஒழுங்கும் கட்டுப்பாடும் நம்மிடையே வலியுறுத்தப்பட்டன. நாட்டிற்காகவும், தேசப் பிதா மகாத்மா காந்தியின் தலைமையில் அரசியல் விடுதலைக்காகவும், தியாகம் புரியவும் முயற்சிகள் மேற்கொள்ளவும் இவை காரணமாயிருந்தன. ஆனால் இன்று துரதிருஷ்ட வசமாக பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோர்களுடைய பிடி தளர்ந்து வருகிறது. இதன் காரணமாக வளரும் தலைமுறையினரிடையே நிராசையுணர்வும், ஒழுங்கின்மையும் வளரக் காண்கிறோம். இதைத் தடுத்தாக வேண்டும். முன்பு போல தாய்மார்கள் பத்து, பன்னிரண்டு வயது வரை குழந்தைகளின் உள்ளங்களை உருவாக்குவதில் முழுப் பொறுப்பு ஏற்றால் மட்டுமே இது சாத்தியமாகும். அந்த வயதுக்குப் பிறகு மாணவர் பால் தந்தையர் போல ஆசிரியர்கள் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். இப்படி வீட்டிலும், பள்ளிக் கூடத்திலும் தனித்த அக்கறை காண்பிக்கப் பட்டால், பொருளாதாரத் துறையில் கடினமான பொறுப்புக்களை மேற்கொண்டு நமது அரசியல் சாசனத்தில் பொறிக்கப்பட்டுள்ள உரிமைகளைக் காத்துக் கொள்வதில் அதே ஆர்வமும் அர்ப்பண உணர்வும் மிக்க இளம் சந்ததியினரை நாம் அடைவோம்.

# தமிழ்நாடு
# கைத்தொழில் ஆசிரியர்கள் சங்கம்.

பதிவு எண் 18/1968.

## திருச்சிராப்பள்ளி - 2.

---

16—3—69 ஞாயிற்றுக்கிழமையன்று காலை 10-30 மணிக்கு திருச்சி தேசீயக் கல்லூரி உயர்நிலைப்பள்ளியில் உயர்திரு. L. மரியப்பிரகாசம் B. A., L. T. J. P.

(பொதுச் செயலாளர், தென்னிந்திய ஆசிரியர் சங்கம், சென்னை.)

*அவர்கள் தலைமையில் நடந்த 3-வது மாநாட்டின் தீர்மானங்கள்*

கீழ்க்காணும் தீர்மானங்களுக்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்படியும், அல்லல்படும் பகுதிநேர கைத்தொழில் ஆசிரியர்களின் அவலநிலை நீக்கப்பட வேண்டும் என்று தமிழக அரசையும், கல்வி இலாக்கா அதிகாரிகளையும் மிக்க பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறது.

## தீர்மானங்கள் :

தமிழக முதல் அமைச்சர் உயர்திரு. அறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்கு இச் சங்கம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது. உயர்திரு. அண்ணா அவர்களின் ஆன்மா சாந்தி அடையவும் இறைவனை வேண்டுகிறது. அன்னாரது மறைவால் வருந்தும் குடும்பத்தினருக்குத் தன் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

உயர்திரு அண்ணா அவர்களின் வழியில் நடந்துவந்த உயர்திரு மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள் தமிழக முதலமைச்சராகப் பதவி ஏற்றுள்ளதைக் குறித்து மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். அவர்களின் தொண்டு தமிழக ஆசிரியர்களுக்கு நற்பயனை அளிக்க வேண்டுமென மனமார வாழ்த்துகிறோம்.

தமிழகக் கல்வி இலாகா அதிகாரி அவர்களின் உத்திரவு G.O. (MS) No. 1319 dated 22-8-68ன்படி, சேவாசிரியர்களின்

கோரிக்கையின்படி, அவர்கள் T. S. L. C. தேர்வு எழுதலாம் என்று அறிவித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மேலே கண்ட உத்திரவில் 8 ஆண்டு ஊழியகாலம் என்பதை 5 ஆண்டு காலமாகக் குறைக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப் படுகிறது, தமிழகக் கல்விச் சட்டம் 13-ன் படி எல்லாக் கைத்தொழில் ஆசிரியர்களும் (விவசாயம், தையல், மரவேலை) 5 வருடங்கள் பணி புரிந்தால் அவர்களும் T. S. L. C. தேர்வு எழுத அனுமதிக்கும்படி இச் சங்கம் அரசினைக் கேட்டுக்கொள்கிறது.

தமிழகம் முழுவதும் உள்ள உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் பணி புரியும் கைத்தொழில் ஆசிரியர்கள் தகுதி பெற்றவர்களாக இருந்தும் பகுதி நேர கைத்தொழில் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு மாதம் ரூ. 30 மட்டும் கொடுக்கப்படும் அவல நிலையை அரசாங்கம் கவனியாது இருப்பதைக் கண்டு இச் சங்கம் தன் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

தமிழகக் கல்வி இலாகா அதிகாரிகள் அவர்கள் கருணைகூர்ந்து, நடுத்தரப் பள்ளிகளில் உள்ள கைத் தொழிலாசிரியருக்கு 4-ஆம் வகுப்பு முதல் 8-வது வகுப்பு வரையில் உள்ள கைத்தொழில் பாடத்தைக்கைத் தொழில் ஆசிரியருக்கே கொடுத்து, பகுதிநேர ஆசிரியர் என்ற நிலையை நீக்கி, முழுநேர ஆசிரியராக நியமனம் செய்து, அதற்குள்ள ஊதி யத்தை வழங்கச் செய்ய வேண்டுமாய் இச் சங்கம் கேட்டுக் கொள்ளு கிறது.

உயர்நிலைப் பள்ளிகளில் 10, 11-ஆம் வகுப்புகளில் கல்வி கற்கும் சுமார் 15, 16 வயதுள்ள மாணவர்கள் தொழிலைப் பற்றியும், அதன் தேவையைப் பற்றியும் அறிந்து கொள்ளும் காலமாகும். இப்பருவத்தில் தான் மாணவர்கள் கைத்தொழில் பாடத்தில் அக்கரை காட்டி அதன் பயனைப் பெறமுடியும். ஆகவே தமிழகத்திலுள்ள உயர் நிலைப் பள்ளிகளில் 10, 11-ஆம் வகுப்புகளுக்குக் கைத்தொழில் பாடம் [நீக்கப்பட்டதை] மீண்டும் கொண்டுவரும்படி இச்சங்கம் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறது.

உயர்நிலைப் பள்ளிகளில் 10, 11-ஆம் வகுப்புகளுக்குக்கைத்தொழில் பாடம் நீக்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட கைத்தொழில் ஆசிரியர் களுக்கு உடனடியாக வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டுமாயும் இச் சங்கம் அரசினைக் கேட்டுக் கொள்கிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் வேலை நீக்கம் செய்யப்பட்டதால் வருந்தும் கைத்தொழில் ஆசிரியர்களுக்கு எங்களது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வேலை நீக்கம் செய்யப்பட்ட கைத்தொழில் ஆசிரியர்களின் நல் வாழ்விற்கு உடனடியாகத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமாய் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இச்சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது.

உயர்நிலைப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்களின் மேற்பார் வைக்கு R. I. P. ஆய்வாளர் ஒருவர் இருப்பதுபோல் கைத்தொழில் பாடத்திற்கும் மாவட்ட வாரியாக ஒரு ஆய்வாளரை நியமிப்பதால் கைத்தொழில் பாடம் நன்கு நடைபெறும் என்று உறுதியளிக்கிறோம். இந்த ஆய்வாளரை நன்கு அனுபவம் பெற்ற தொழில் ஆசிரி யர்களிலிருந்து தேர்ந்தெடுக்க வேண்டுமென்று இச்சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது.

உயர்நிலைப் பள்ளியில் நீண்ட நாட்களாகப் பணிபுரியும் கைத் தொழில் ஆசிரியர்களுக்கு 1960-ஆம் வருடத்திய சம்பளத் திருத் தத்தின்படி 5 ஆண்டுகளுக்கு முன்பே, கடைசி ஊதியத்தைப் பெற்று [Maximum] எவ்வித உயர்வும் இல்லாமல் இருக்கும் கைத்தொழில் ஆசிரியர்களுக்கு, தமிழாசிரியர்களுக்குக் கொடுக்கும் சலுகைகளைப் போல் செலக்‌ஷன் கிரேடில் ஒரு புதிய சம்பள விகிதத்தை அமைக்கும்படி இம்மாநாடு அரசினைக் கேட்டுக் கொள்ளுகிறது.

உயர்நிலைப்பள்ளி, நடுநிலைப்பள்ளிகளில் பணிபுரியும் கைத்தொழி லாசிரியர்கள் மற்ற பகுதிகளான சீனியர் கிரேடு, தமிழ் வித்துவான், B. A. தேர்வுகளில் தேர்வு பெற்றிருந்தால், பிற ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளைப்போல், கைத்தொழிலாசிரியர்களுக்கும் அளிக்கவேணுமாய் இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

தமிழகம் முழுவதிலும் உள்ள எல்லாப் பள்ளிகளிலும் ஒரே மாதிரி யாகக் கைத்தொழில் பாடம் நடைபெறவும், அப்பாடத்தையும் தேர்வுக்குள்ள பாடமாக அமைக்க வேண்டுமாயும் தமிழகக் கல்வி இலாக்கா அதிகாரிகளை இம்மாநாடு கேட்டுக் கொள்ளு கிறது.

**K. இராமநாதன்,**
தலைவர்.

**M. ஆசீர்வாதம்.**
பொதுச் செயலாளர்.

# மதுரைக் கல்வி மாவட்ட உதவி பெறும் பள்ளிகளின் நிர்வாகிகள் சங்கம், மதுரை.

(பதிவு பெற்றது)

# கோரிக்கைகள்

(1) அரசு உதவி பெறும் தனியார் துவக்க, நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் பஞ்சாயத்து யூனியன் பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுத்துவருவது போலப் பிரதி மாதமும் முதல் தேதியே சம்பளப் பட்டுவாடா செய்ய வசதியாக "செக்" மூலம் போதன உதவித்தொகை வழங்க உத்திரவு செய்யும்படிக்கும்.

2) உதவி பெறும் பள்ளிகளில் பணி புரியும் ஆரம்ப ஆசிரியர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போல வீட்டு வாடகை, வைத்திய வசதி, பண்டிகை முன் பணம் பெறுதல், உரிமை விடுப்பைச் சமர்ப்பித்து ரொக்கம் பெறுதல் போன்ற சலுகைகள் அளிக்கும்படிக்கும்,

3) பத்து ஆசிரியர்களுக்கு மேல் உள்ள பள்ளிகளுக்கு, ஆசிரியர்கள் சிறு விடுப்பு எடுக்கும் சமயங்களில் பதிலியாக வகுப்பைக் கவனிக்கவும், பள்ளிக் கணக்குகள் எழுத உதவவும், உதவியாக இருந்த உபரி (எக்ஸ்டிரா) ஆசிரியர் ஸ்தானம் நீக்கப்பட்டிருப்பதை மீண்டும் நியமனம் செய்ய உத்திரவு கொடுக்கும்படிக்கும்,

4) மாநிலக் கல்வி இயக்குநர் அவர்களின் அலுவலக ஆணை R. C. 618 B7/63 21—10—64உ யிட்ட உத்திரவில் நிர்வாக மான்யம் (Maintanance Grant) பத்து சதவீதத்தை 15 சதவீதமாக உயர்த்த வேண்டுமென்ற உத்திரவை நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதை (Deferred) மறுபரிசீலனை செய்து பள்ளி நடைமுறைச் செலவுகள் அதிகமாக உள்ள இக்காலத்திற்குத் தக்கவாறு 20 சத வீதமாவது நிர்வாக மான்யம் வழங்க வேண்டுமென்றும்.

5) 1964-ம் வருடத்திய மாணவர் சம்பள நஷ்ட ஈட்டுத் தொகை இன்னும் சில பள்ளிகளுக்குக் கொடுபடாமல் பாக்கி இருப்பதை உடனடியாக வழங்க உத்திரவு செய்ய வேண்டுமென்றும்.

6) செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் எந்த வகுப்பில் பணியாற்றினாலும், அவர்களின் தகுதிக்குரிய செகண்டரி கிரேடு சம்பள விகிதத்தையே கொடுக்கும்படிக்கும்,

7) இந்தி, உருது, சமஸ்கிருதம் போன்ற பிற மொழிப் பண்டிதர்களை ஆரம்பப் பள்ளிகளில் நியமனம் செய்யும்படியான புது ஏற்பாட்டி-

ருல் பள்ளி நிர்வாகிகளின் அடிப்படை உரிமையை இழக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனுல் கல்வி ஸ்தாபனங்களில் ஒழுங்கு, கட்டுப்பாடு போன்றவைகளை நிலைநாட்டி ஆசிரியர்களை வேலை வாங்க இயலாத நிலை ஏற்படும். தவிர ஆரம்பப் பள்ளிகளில் பிறமொழிப் பண்டிதர்களைக் கட்டாயப்படுத்தித் திணிக்கப்படுவதால் கல்வித் தரமும், தமிழ் வளர்ச்சியும் பாதிக்கப்படுமாகையால் பிறமொழிப் பண்டிதர்களுக்கு உயர்நிலைப் பள்ளிகளிலேயே வேலை வழங்க வேண்டுமாயும்,

8) கல்வி இலாக்கா சட்டப்படிக்கும், ஊழியப்பட்டி ஒப்பந்தப்படிக்கும், நிர்வாகியும் ஆசிரியரும் நடந்துகொள்ள வேண்டிய முறையைக் கல்வி இலாகா அனுசரித்து வேலையில் ஒழுங்கினமாக இருக்கும் ஆசிரியரை மூன்று மாத கால அவகாசம் (நோட்டீஸ்) கொடுத்து முன்பு இருந்தபடியே வேலை நீக்கம் செய்யும் உரிமையை நிர்வாகிக்கு அளிக்கும்படிக்கும்,

9) கோத்தாரிக் கமிஷன் சம்பள விகிதத்தை உடனடியாக ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கும் கிடைக்கும்படி அமல் செய்ய வேண்டுமாயும்,

10) முப்பது ஆண்டுகளும் அதற்கு மேலும் நாட்டு மக்களின் அறிவு வளர்ச்சிக்கு உழைத்து ஒய்வுபெற்ற ஆரம்ப ஆசிரியர்களுக்குச் சம்பளத்தில் பாதி பென்ஷன் தொகையாகவும் N. G. O.-க்களுக்கு வழங்கப்படும் பஞ்சப்படியையும் சேர்த்து வழங்க வேண்டுமென்றும்,

11) கெஜட் பதிவில்லாத அரசு ஊழியர்களுக்கு அவ்வப்போது வழங்கும் எல்லாச் சலுகைகளையும் வித்யாசம் பாராட்டாமல் உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும் அவ்வப்போது வழங்கும்படிக்கும்,

12) பெரும்பான்மையான தனியார் பள்ளிகள் வாடகை இடங்களில் உள்ளன. அதிக வாடகை கோரியும் கட்டிடங்களுக்கு எவ்வித மராமத்துகள் செய்யாமலும் பள்ளியைக் காலி செய்யும்படி வழக்குகள் தொடர்ந்தும், நிர்வாகிகளுக்கு மிகவும் சிரமங்கள் ஏற்படுத்துவதால் பள்ளிக்கு இடம் வாங்கவும், கட்டிடங்கள் கட்டவும் நீண்டகாலச் சுலபத் தவணை முறையில் தமிழக அரசு நேரிடையாகக் கடன் வழங்கி உதவ வேண்டுமாயும்,

13) விஞ்ஞான பாட போதனைக்குரிய உபகரணங்கள் வாங்கக் கொடுக்கப்படும் உதவித் தொகையை எல்லா உயர் துவக்கப் பள்ளிகளுக்கும் வழங்கப்பட வேண்டுமென்றும்,

14) கல்விச் சுற்றுலாவுக்காக, கோடை விடுமுறை காலத்தில் ஆசிரியர்கள் தமது போதனு அறிவை விருத்தி செய்து கொள்ளும் பொருட்டு தமிழக அரசு பஸ்போக்குவரத்தில் சலுகைக் கட்டணத்தில் பிரயாணம் செய்யும் சலுகை வழங்க வேண்டுமென்றும்,

15) தற்போது பள்ளிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள மாணவர்கள் எண்ணிக்கைக்குத் தக்க விகிதப்படி ஆசிரியர்களை நியமிப்பதில் கோட்டாமுறை (Allotment of Additional Post) இருந்து வருவதால் கல்வி ஆண்டுத் துவக்கத்திலேயே அதிக மாணவர்கள் சேர்ந்ததும் உடனடியாக ஆசிரியர்கள் நியமிக்க முடியாநிலை இருப்பதால் கல்வியின் தரக்குறைவும், நிர்வாகச்சிரமங்களும் ஏற்படுகிறது. இதைத் தவிர்க்க முன் போலவே அதிக மாணவர்கள் சேர்ந்தவுடன் மாணவர்கள் விகிதப்படி வகுப்புகளைப் பிரித்து ஆய்வாளர்களின் அனுமதியுடன் ஆசிரியர்களை நியமிக்க அனுமதி வழங்குமாறும்,

16) இலவச மதிய உணவு பெறும் குழந்தைகளுக்கு வழங்கப் பட்டிருக்கும் சிலேட்டுகள் பயன்படுத்த முடியாத நிலையிலிருப்பதைப் பரிசோதித்து எழுதும் நிலையில் பயன்படும் சிலேட்டுக்கள் வழங்க வேண்டுமென்றும், ஜூன் மாதத் துவக்கத்திலேயே சிலேட்டுகளும், புத்தகங்களும் கொடுக்கப்பட வேண்டுமென்றும்,

17) 1957ஆம் ஆண்டில் இலவச மதியஉணவுவழங்கும் திட்டம் அமுலுக்கு வந்தது. அது முதல் இதுவரை ஒரு சாப்பாட்டுக்கு ஆறு பைசா வீதம் அரசு மானியம் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் கள்ளர் சீர் அமைப்புப் பள்ளிகளிலும் ஹரிஜன க்ஷேமநலப் பள்ளிகளிலும் சாப்பாடு ஒன்றுக்கு 15 பைசா வீதம் கொடுக்கப்பட்டு வருகிறது. கால நிலையையும், விலைவாசியையும் அனுசரித்து உதவி பெறும் பள்ளி களுக்கும் இலவச மதிய உணவுக்குப் பதினைந்து பைசா வீதம் வழங்க வேண்டுமென்றும்,

18) கல்வி சம்பந்தமான சகல உத்திரவுகளும் பள்ளி ஆண்டின் துவக்கத்திற்கு முன்னமேயே வெளியிடும்படிக்கும் ஷை உத்திரவுகளின் பிரதிநகல் ஒன்று எங்கள் சங்கத்திற்கு அனுப்பிவைத்து கல்வி இலாகாவுக்கு ஒத்துழைப்புச் செய்யும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டு மென்றும்,

19) உயர் ஆரம்பப் பள்ளிகளில் பணியாற்றும் கைத்தொழில் ஆசிரியர்கள் அனைவரையும் முழுநேர ஊழியராகப்பாவித்து அவர் களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள சம்பள விகிதம் வழங்கப்பட வேண்டு மென்றும்,

20) தனியார் பள்ளிகளில் ஆரம்பக் கல்வியின் சிறந்த சேவையை முற்றிலும் உணர்ந்தும், ஆரம்ப ஆசிரியர்களிடம் விசேஷ அனுதாபமும் கொண்டுள்ள தமிழக அரசும், கல்வி இலாகாவும், நிதி இலாகாவும் மேற்கண்ட கோரிக்கைகளைக் கருணையுடன் பரிசீலித்து அமல் நடத்தி ஆதரிக்க வேணுமாய்ப் பணிவன்புடன் வேண்டிக்கொள்ளுகிறோம்.

மதுரை,
10—3—'69.

இங்ஙனம்,
**மதுரைக் கல்வி மாவட்ட உதவி பெறும்**
**பள்ளிகளின் நிர்வாகிகள் சங்கம், மதுரை.**

# தஞ்சை மாவட்டம் உதவி பெறும் துவக்கப்பள்ளி நிருவாகிகள்—ஆசிரிய நிருவாகிகள் சங்கம்

●

## தமிழ்நாடு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் சங்கத்தின் சார்பாக ஷை சங்கத்தின் குழுவினர் 29-3-69இல் வேதாரண்யத்தில் சமர்ப்பித்த விண்ணப்பம்

---

பெருமதிப்பிற்குரிய ஐயா,

தங்களுக்கு எங்கள் சங்கத்தின் சார்பாக வணக்கத்தையும் நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கிறோம். எங்களது பள்ளி நிருவாகத்தில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களுள் சில முக்கியமானவற்றைத் தங்களது மேலான கவனத்திற்குக் கொணர்ந்து அதற்கு ஆவன செய்து தகுந்த உத்திரவு அளிக்கும்படி வணக்கமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

(1) Acountant General அலுவலகத்தார் எங்களது பாடசாலைக் கணக்குகளைச்சோதனைச் செய்ததின் முடிவாய், நிருவாகிகள் கல்வி அதிகாரி அவர்கள் ஒப்புதலையும் அங்கிகாரத்தையும் பெற்று ஆசிரியர்களுக்குப் பட்டுவாடா செய்த கற்பிப்பு மான்யம் கல்வி விதிகளுக்கு மாறாக வழங்கப்பட்டு உள்ளதெனக் காரணம் கூறி நிருவாகிகளுக்கு வழங்கப்பட்ட கற்பிப்பு மான்யம், நிருவாக மான்யம் முதலியவற்றைத் திரும்பக் கருவூலத்தில் கட்டவேண்டுமென்று கல்வி அதிகாரிகள் உத்திரவு செய்கிறார்கள். மேலும் வழங்கப்பட வேண்டிய பல மான்யங்கள் (Grants) கல்வி அதிகாரிகளால் நிறுத்தி வைக்கப்படுகின்றன. இவற்றைத் தவிர்க்க ஆவன செய்ய வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

2. எங்கள் பாடசாலைகளுக்கு வழங்கப்பட வேண்டிய பல்வேறு மான்ய தொகைகள் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து ஒன்றிப்பு மன்றத்தில் போதுமான நிதி இல்லாமை காரணமாகக் குறிப்பிட்ட காலத்தில் ஷை மன்றத்தார் வழங்க முடியாமல் கால தாமதம் ஆவதால், இதற்குப் போதிய நடவடிக்கைகளைத் தாங்கள் செய்து தருமாறு வேண்டுகிறோம்.

3. விலைவாசிகள் ஏற்றத்தின் காரணமாய் எங்களுக்கு ஏற்பட்டுள்ள பண நெருக்கடியைத் தவிர்க்கும் பொருட்டு நிர்வாக மான்யத்தை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வழங்கக் கேட்டுக் கொள்கிறோம்.

4. ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்காக அரசினரால் அவ்வப்பொழுது ஏற்படுத்தப்படும் பல்வேறு குழுக்களில் எங்களுக்குப் போதிய பிரதி நிதித்துவம் அளிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.

5. உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகளில் வகுப்புகளில் ஏற்படும் பிரிவுகளுக்காக (Bifurcations of Standards) நியமிக்கப்படும் ஆசிரியர்கள் சில ஆண்டுக்காலம் அப்பள்ளியில் வேலை செய்து வரும் போது பிரிவுகளுக்கெனக் காட்டப்பட வேண்டிய சராசரி வருகையில் குறைவு ஏற்பட்டால் அவ்வாசிரியர்கள் பாதுகாப்பின்றி வேலையை இழக்க நேரிடுகிறது. அந்நிலையில் அத்தகைய ஆசிரியர்களை ஊராட்சி ஒன்றிப்பு பள்ளிகளில் அமர்த்தப்பட்டு அவர்களுடைய ஊதியம் பாதிக்கப்படாமல் அவர்கள் முன் வாங்கிய சம்பளத்திலேயே தொடர்ந்து பணிபுரிய அரசு ஆவன செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

6. 1—4—58க்கு முன் செகண்டரி கிரேடும், சீனியர் பேசிக் கிரேடும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் செகண்டரி கிரேடு சம்பளம் வாங்கியிருந்தால் அவர்கள் அதே பள்ளியில் எந்த வகுப்பு போதித்தாலும் செகண்டரி கிரேடு சம்பளம் வழங்கப்படும் என்று அரசாங்க உத்திரவு இருக்கிறது. ஷை ஆசிரியர்கள் எதிர்பாராத விதமாக அப்பள்ளியில் வேலை இழந்து வேறு எந்த நிருவாகத்தில் அமரும் போதும் அவர்கள் எந்த வகுப்பு போதித்தாலும் அவர்களுக்கு முன்பு வழங்கப்பட்ட ஊதியமே வழங்க அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

7. செகண்டரி கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஆரம்பப் பள்ளியில் எந்த வகுப்பு போதித்தாலும் அவர்களுடைய தகுதியைக் கருதி அதற்கு உரித்தான மான்யத்தை அளிக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இன்னணம்,

தங்கள் பணிவுள்ள,

**கே. ரங்கசாமி.**

தலைவர்.

# வைர வேட்டை

ஆதாரம் 'டிட்பிட்ஸ்' தமிழில் : அதிகமான்

●

*[வைரத்தை 'சாத்தானின் நண்பன்' என்கிருர்கள் அமெரிக்கர்கள். உயர்ந்த விலேயுள்ள வைரம் வைத்திருப்பவர்கள் உயிரோடிருக்க மாட்டார்கள் என்பது உலக நம்பிக்கை. அவர்கள் உயிரோடிருக்கிருர்களோ இல்லேயோ சிறந்த வைரம் வைத்திருப்பவர்கள் நிம்மதியாக இருக்க முடியாது என்பதைச் சுவைபட விளக்கும் கட்டுரை இது.]*

❋

007' என்ருல் ஜேம்ஸ் பாண்ட் என்கிற துப்பறியும் நிபுணனின் பெயர்தான் உங்களுக்கு ஞாபகம் வரும். பிரேஜில் சர்க்கார் 'வைரம்' வெட்டி எடுக்க முன் வருபவர்களுக்கு, நம்பர்கள் கொடுப்பது உண்டு. வைரங்களே வெட்டி எடுக்க முன் வந்த ஜோபா சாப்ரின் ஹோா என்பவனுக்குக் கொடுக்கப்பட்ட எண்தான் 007. அவன் எடுத்த வைரத்திற்கும், அவனுக்குக் கொடுக்கப்பட்ட எண்ணேயே வைத்து விட்டார்கள். அதனுல் 007 என்கிற பெயருடன் வெளி வந்த வைரத்தின் மதிப்பு சுமார் ஏழு லட்சம் பவுன்கள். அதற்கு மேலும் மதிப்பிடலாம் என்கிருர்கள்.

இந்த வைரத்தின் வரலாறு மிகவும் ருசிகரமானது. வைரங்களே வெட்டி எடுக்க லேசன்ஸ் பெற்ற ஜோயா, பிரேஜில் நாட்டு மலேப் பிரதேசத்தில், மும்முரமாக பாறைகளேயும், கற்களேயும் அப்புறப் படுத்தி, வைரங்களேத் தேடிக் கொண்டிருந்த சமயம்! ஒரு பாறையைத் தனது சக்தியால், பலங் கொண்ட மட்டும் அடித்து உடைத்தபோது...

007 வைரம் அகப்பட்டுவிட்டது. அந்தப் பருமன் உள்ள வைரத்தை பாறை உள்ளடக்கிக் கொண்டிருக்கும் என்று ஜோயா நினேக்கவே இல்லே! அந்த வைரம் ஒரு மில்லியன் பவுன்கள் மதிப்பு இருக்கலாம் என்பது அப்போதே கணக்குப் போட்டு விட்டான் ஜோபா. அதனுல், ஜோபா வைரத்தை மறைத்துக் கொண்டு தலேநகர் பிரேஜிலியாவின் ஒரு மூலேயில் இருந்த 'பிரி சிட்டி' என்ற பகுதிக்குப் போய் விட்டான். அந்த இடம், திருடர்கள், கொள்ளேக்காரர்கள், கொலேகாரர்கள், விபசாரிகள் ஆகியவர்களுக்குப் பெயர் போனது.

அங்கே ஒரு முக்கியமான ஓட்டல். அதை நடத்தியவன் தாக்க போலஸ் என்னும் பெயருடைய ஒரு கிரேக்கன். தாக்க போலஸ் ஜோபாவிடமிருந்த வைரத்தைப் பார்த்தவுடன், இதை எப்படியாவது அடைந்தே தீர வேண்டும் என்று முடிவு செய்து கொண்டான். வைரத்தை விற்றுப் பணத்தைப் பார்க்க ஆவல் கொண்டிருந்த ஜோபாவுக்கும் அப்போதைக்கு தாக்க போலஸை விட்டால், இரகசியமாக இவ்வேலையைச் செய்ய வேறு ஆட்கள் இல்லை. கிரேக்கனுக்கு வைரத்தைப் பற்றி யோசனை கூற ரஷித் அப்துல் என்னும் சிரியா நாட்டுக்காரன் உதவியாக இருந்தான்.

இருவரும் சேர்ந்து ஜோபாவை சரிகட்டிவிட்டார்கள். வைரத்தை அவனும் 1600 பவுன்களுக்கு விற்றுவிட ஒப்புக் கொண்டான். அதிக விலைக்குப் போகும் என்றாலும், புதிய இடத்தில் முயற்சிக்க அவனுக்குப் பயம். பேச்சு வார்த்தைகள் முடிந்த தினம் பாங்குகளுக்குவிடுமுறையாகஇருந்ததால் கிரேக்கன், ஜோபாவுக்கு பணத்திற்குப் பதில் செக்கை கொடுத்துவிட்டான். பாங்கில் அவன் பணம் போட்டிருக்கிறான் என்பதற்கறிகுறியாக பல ரசீதுகளையும், ரிகார்டுகளையும் கிரேக்கன் ஜோபாவிடம் காண்பித்த பிறகு தான் அவனுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. ஆனால் அந்தச் சமயத்தில் தான் பார்த்த தஸ்தாவேஜுகள் அவ்வளவும் போர்ஜி என்று அவனுக்குத் தெரியாது. பிரீசிட்டி பகுதியில் இருந்த 'பார்' களில் உல்லாசமாகப் பொழுதைக் கழித்துவிட்டுஜோபா, பணத்தைப் பெற்றுக் கொள்ள பாங்குக்குத் திரும்பி வந்த போது, கிரேக்கனும், அவனது சிரிப்பு நண்பனும் 1500 மைல்களுக்கு அப்பால் இருந்தார்கள். ஆம்! வைரம் அவர்களிடம்தான் இருந்தது.

பணம் பெற முடியாமல் தவித்த ஜோபா, அடுத்த நடவடிக்கையாக செக்கை எடுத்துக்கொண்டு போய், பிரேஜ்லியா, போலிசாரிடம் ஒப்படைத்தான். போலீசார், அந்த வழக்கை எக்பர்டோ அசம்காவ் என்னும் இளம் துப்பறியும் நிபுணனிடம் ஒப்படைத்தார்கள். அவனே ஒரு பிரபல போக்கிரி. போக்கிரிகளால்தான் மற்ற போக்கிரிகளை வளைத்துப் பிடிக்க முடியும் என்பது போலீசாரின் எண்ணம். அதனால் தான் அவனுக்குத் துப்பறியும் இலாகாவில் வேலை கொடுத்திருந்தார்கள். எக்பர்டோ இருக்கிறானே அவனுடைய முறைகள் மிகவும் பயங்கரமானவை. பலாத்காரம் அவன் உடன் பிறப்பு! அடி, உதை இவைகளினால் தான் குற்றவாளிகளை வழிக்குக் கொண்டுவர முடியும் என்று நம்புகிறவன். போக்கிரிதான்? அவனுடைய கொடுமைகளுக்கு உதாரணமாக ஒரு கதை உலவி வந்தது...

பொழுது போகவும் ஆனந்தமாக இருக்கவும் அவன் ஒரு வேலையைச் செய்வானும், நகரில் இருக்கும் சில விலை மாதர்களை

வலைப் பிரதேசத்திற்கு இழுத்துக் கொண்டு போய் அங்கே அவர்களை நிர்வாணமாக நிறுத்தி 'சவுக்கால்' அடிப்பது வழக்கமாம். பிறகு அவர்கள் எப்படியோ நகருக்குத் திரும்பட்டும் என்று போய் விடுவாகும். அதனால் அவனைக் கண்டால் உள்ளூர் போக்கிரிகளும், பெயரைக் கேள்விப்பட்டால் வெளியூர்ப் போக்கிரிகளும் பயந்து கொண்டிருந்தார்கள்.

எக்பர்டோவிடம் வைரக் கேஸ் ஒப்படைக்கப் பட்டவுடன் அவன் செய்த முதல் வேலை தாக்க போலஸின் மனைவி, பிரேஜில் நாட்டை விட்டு வெளியே போக முடியாமல் பாஸ் போர்ட் வழங்குவதில் தொல்லை கொடுத்து நிறுத்தினன். இந்தச் சமயத்தில் தாக்கா போலஸ் உருக்வேயில் இருந்த கிரீஸிக்குப் புறப்பட்டு விட்டான். ஆனால் அவன் மீண்டும் ரியோவுக்கு ஏதோ ஒரு காரணத்தின் பெயரில் வரவழைக்கப்பட்டு அங்கே கைது செய்யப்பட்டு விட்டான். கைதானவுடன் தாக்கா போலஸ்: வைரம் கீழே விழுந்து உடைந்து போய் விட்டது என்று கூறி விட்டான். எக்பர்டோ அதை நம்பவில்லை. அவனுக்குத் தெரியாதா இந்த விஷயங்களைப் பற்றி —கிரேக்கனைப் பிடித்தவுடன் எக்பர்டோவின் மனதில் வேறு எண்ணங்கள் உதித்து விட்டன.

பிரேஜிலியாவுக்கு தாக்கா போலஸ் கொண்டு வரப்பட்டான் அங்கே அவன் சிறையில் அடைக்கப்பட்டாலும், சிறையிலிருந்து தப்பி விட்டான் என்று செய்தியைப் பரப்பி விட்டு, அவனைக் கடத்திக் கொண்டு போக எக்பர்டே, ஏற்பாடு செய்து விட்டான். கிரேக்கனிடமிருந்து வைரத்தை எப்படியும் பறித்துக் கொள்ள வேண்டும் என்பது துப்பறிபவனின் எண்ணம். தன்னைக் கடத்திக் கொண்டு போனவர்களிடமிருந்து தப்பித்துக் கொண்ட கிரேக்கன், பாதுகாப்பிற்காக மீண்டும் சிறைச்சாலைக்கே வந்து விட்டான் : ஆலைல் எக்பர்டோ அவ்வளவு ஏமாளியா? மீண்டும் கிரேக்கனைக் கடத்திக் கொண்டு போக ஏற்பாடு செய்து விட்டான்!

கிரேக்கன் ஒரு காரின் பின் பக்கத்தில், சாமான்கள் வைக்கப்படும் 'பூட்'டில் அடைக்கப்பட்டு, பிரேஜில் நாட்டின் பல பகுதிகளுக்கும் கொண்டு போகப்பட்டான். கார் அப்போது சுற்றியது 3000 மைல்! ஒவ்வொரு இடத்திலும் அவன் வண்டியிலிருந்து இறக்கப்பட்டு எக்பர்டோவின் ஆட்களினல் சொல்ல முடியாத சித்ரவதைக்கு உட்பட்டான். சித்ரவதை என்ருல் சாதாரணமானது அல்ல... இதைப் போல் ஒரு மனிதன் கொடுமைகளுக்கு உட்பட்டதில்லை என்று கூறினல் போதும். அவர்கள் கேட்டது ஒரே கேள்வி ......"வைரம் எங்கே இருக்கிறது? கிரேக்கன் அந்தக் கேள்விக்கு மட்டும் பதில் சொல்லவில்லை.

எரியும் மெழுகுவர்த்தி நன்ருகக்

காய்ச்சப்பட்ட இரும்புத் துண்டு இவைகளினுல் அவனுக்குச் சூடு போட்டார்கள். தலையிலிருந்து முடியைக் கொத்துக் கொத்தாகப் பிடுங்கினுர்கள். சவரக் கத்தியி ஞல் அவனைக் கண்ட இடத்தில் வெட்டினுர்கள். உடம்பெங்கும் தேனைத் தடவி எறும்புக் குழியில் அருகில் உட்கார வைத்தார்கள். இதைப்போல பல கொடுமைகள் !

இவ்வளவிற்குப் பிறகும் கிரேக் கன் வாயைத் திறக்கவில்லை. அவர்கள், சிகப்பு மலைப் பகுதியில் இருந்த ஒரு பண்ணைக்கு வந்தார் கள். அந்தப் பண்ணை சோயி பிரான்ஜியாடோ என்னும் நபருக் குச் சொந்தமானது. அவன் பிரே ஜில் நாட்டில் ஒரு சர்க்கார் அதி *காரி.* வயது *12.* அந்தப் பண் ணையில், எக்பர்டோ கொடுத்த புது விதமான தொல்லையைத் தாங்க முடியாமல், கிரேக்கன் தாக்க போலஸ், வைரம் ஏதென் ஸில் இருப்பதாகச் சொல்லி விட் டான். எக்பர்டோவும், சோயி யும் ஏதென்ஸுக்குப் போய் முயற்சித்து விட்டு வெறுங்கையு டன் திரும்பினுர்கள், இதற்குள் ளாக, கிரேக்கனின் மனைவி, தனது கணவரைக் கோர்ட்டில் கொண்டு வந்து ஒப்புவிக்கவேண்டும் என்று நீதிபதியிடம் உத்தரவு பெற்றிருந் தாள். எக்பர்டோ, உடனே, கிரேக்கன் காணுமற் போய் விட் டான் என்று சொல்லி; அதை உறுதிப்படுத்தியும் விட்டான்.

ஆனுல், அவரது தலைமை அதி காரி எக்பர்டோவின் கூற்றை நம் பாமல் ஜோயின் பண்ணையைச் சோதனை போட உத்தரவு கொடுத்து விட்டார். ஆனுல் பண்ணை காலியாக இருந்தது. அதிகாரி சளைக்காமல், வழக்கை எக்பர்டோவின் பொறுப்பிலிருந்து, தான் எடுத்துக் கொண்டு அவனைக் கைது செய்து விட்டார். சோ யின்மீது சர்க்கார் நடவடிக்கை எடுத்தது. இதற்குள்ளாக எக்பர் டோவின் கையாட்கள், கிரேக் கனைப்பல இடங்களுக்குக் கடத்திக் கொண்டு போய் வைத்திருந்தார் கள். கடைசியாக போலீசார், ஜோபாவின் இரு வக்கீல்களுக்குச் சொந்தமான பண்ணையில் கிரேக் கனையும், அவனைக் கடத்திக் கொண்டு போன ஆட்களையும் பிடித்து விட்டார்கள்.

போலீசார் அங்கே போன போது உடம்பில் பெரும் பகுதியில் காயங்களைத் தாங்கிக் கொண்டி ருந்த கிரேக்கன் சர்க்கார் வைத்தி யர் பொறுப்பில் மருத்துவத்திற் காக விடப்பட்டிருந்தான். அவனை ஜோபாவும், அவனது இரு குமாரர்களும், வக்கீல்களும், மேற் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லோரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக் கப்பட்டார்கள்.

வழக்கு ஆரம்பமாகியது. எக்பர் டோ, போலீஸ் தலைமை அதிகாரி தான் இவ்வளவிற்கும் காரணம் என்று கூசாமல் பொய் சொன்ஞன். கடத்தப்பட்டது. கொடுமைப் படுத்தியது, சதிக்கு திட்டம் போட்டது, ஆகிய எல்லாவற்றிற்

குமே போலீஸ் அதிகாரிதான் வழி காட்டியவர் என்று சோயி யும், எக்பர்டோவைப் போலவே கூறியதால் தலைமை அதிகாரி பதவி யிலிருந்து விலக்கப்பட்டார். போலீஸ் நிர்வாகம் குறை கூறப் பட்டது. சோயி மீது இருந்த சந்தேகம் நிவர்த்திக்கப்பட்டது.

இருப்பினும் வைரம் எங்கே என்று யாருக்கும் தெரியாது. தாக்கா போலஸ் ஒருவன் தான் அது எங்கே இருக்கிறது என்று சரியாகச் சொல்ல முடியும்! ஆனால் அவனோ, அந்த வைரம் 'போலி' என்று சொல்லிக்கொண் டிருந்தான். அதை யாருமே நம்பு வதாக இல்லை. சிறையில் இருக் கும் அவனை அவன் மனைவி பார்க் கப் போகும் போதெல்லாம்—

"ஏழு வருடங்கள் நான் சிறை யில் இருக்கப் போகிறேன்—வெளியே வந்தவுடன், உலகத்தின் கவலைகளைப் பொறுத்த வரையில் எனக்கு அவைகளிடமிருந்து விடு தலை" என்று சொல்வது வழக்கம்.

அதற்கு என்ன அர்த்தம் என்று அதிகாரிகளுக்குத் தெரியும்!

எக்பர்டோ சிறையிலிருந்து விடு தலையாகி விட்டான் நகரத்தை விட்டு வெளியேறக் கூடாது என்று அவனிடம் உறுதிமொழி வாங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவனை யார் கண்காணிக்க முடி யும்?

"வைரங்கள் சாத்தானின் நண் பர்கள்" என்று பிரேஜில் நாட்டில் ஒரு பழமொழி உண்டு. அது எவ்வளவு உண்மையானது!

—"முத்தாரம்"


# புதுமுறை சங்க வாய்பாடு

**V. K. சேஷாத்திரி, B.A., L.T.**

**( Retired Deputy Inspector of schools. )**

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0-13 ந. பை. 100 வாய் பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 9 வீதம் கொடுக்கப்படும்.

**அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்**

வளரும் விஞ்ஞானம்

# உவர் நீர்ப்பாசனம் தேவையும் பிரச்னையும்

— பெ. நா. அப்புஸ்வாமி —

※

நாம் வாழும் பூமியின் மொத்தப் பரப்பு ஏறக்குறைய பத்தொன்பதே முக்கால் கோடி சதுர மைல். அதில் ஏறத்தாழ ஐந்தே கால் கோடி-அதாவது கால் பங்குக்குச் சற்றே மேலான பகுதி-நிலப் பரப்பு; மற்றது கடல். இந்த நிலப் பரப்பில் காடும், பாலையும், பனி நிலமும், பாலை நிலமும், பள்ளத்தாக்கும், சம வெளிகளும் அடங்கியுள்ளன. கல்லும், காடும், சரளை நிலமும், களிமண் நிலமும், மணல் பரப்பும் மணல் மேடுகளும், உவர் நிலமும் என்று இந்நிலப்பரப்பு, மண்ணின் வகையாலும், பலதரப்பட்டதாகக் காணப்படுகிறது.

இப் பூமியில், மக்கள் தொகை குறைவாக இருந்த பண்டைக் காலத்தில் வாழ்ந்த மக்கள் தங்களுடைய அறிவின் திறத்தாலும், கருவிகளைப் படைத்துக் கையாளும் ஆற்றலிலும்கூடக் குறைவானவர்களாக இருந்தார்கள். அவர்களுடைய நாகரிகமும் மனப்போக்கும், செயல் திறமைகளும், வாழ்க்கை முறைகளும், இக்காலத்தில் நாம் பொதுவாகக் காணும் திறமைகள், முறைகள் முதலிய பலவற்றிலிருந்தும், மிகப் பலவகைகளிலும், மிகப் பெரிதும் வேறுபட்டிருந்தன. இயற்கையைக் கண்டு அஞ்சியும், அக் காலச் சூழ்நிலைகளுக்கு முற்றும் முழுதாக உட்பட்டும், அவற்றை மாற்றி அமைக்கவோ, தவிர்க்கவோ வழி தெரியாமலும் இக்கால விலங்குகள் வாழ்வதைப் போலவே, பெரும்பான்மையும் அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். தமக்கு அகப்பட்ட விலங்குகளை வேட்டையாடிக் கொன்றும், இயற்கையாக விளைந்தவற்றைப் பொறுக்கி எடுத்து உண்டும், வாழ்ந்து வந்தார்கள். மக்கள் தொகை பெருகி வந்தது. நாளடைவில் அம் மக்கள் நிலங்களைப் பயிரிடக் கற்றுக் கொண்டார்கள். விவசாயம் தொடங்கிற்று. மண்ணின் தரம், நீரின் வளம், பயிரிடும் காலம், உழுதல், உரமிடுதல், களை பறித்தல், அறுவடை செய்தல், கிடைத்தவற்றைச் சேமித்துப் பாதுகாத்தல் முதலியவைகளையெல்லாம் படிப்படியாகத் தெரிந்து கொண்டார்கள்.

இவற்றுக்கு எல்லாம் அடிப்படைக் காரணம் செய்து-பிசகி-அறியும் முறைகள். இவை அங்கங்கே பயிலப்பட்டும், கைவிடப்பட்டும், பரம்பரையாகவும், நாட்டுக்கு நாடு, மக்களுக்கு மக்கள்

என்னும் முறையிலும், சிறிது சிறிதாக வளர்ந்து வந்தன. சில முறைகள் மாறின; வேறு சில தங்கி நிலையாக நின்றன. சிற்சில வகை நிலங்களே பயிரிடுவதற்கு ஏற்றவை என்றும், சிற்சில வகை உரங்களே அப் பயிர்களுக்கு வலிமை ஊட்டுபவை என்றும், சிற்சில வகை நீரே அவற்றுக்கு உணவூட்ட உதவுபவை என்றும், மக்கள் நம்பி வந்தார்கள். இக் கருத்துக்கள் சிறிது சிறிதாக மாறிக்கொண்டு வருகின்றன. விஞ்ஞான அறிவே இதற்குக் காரணம்.

வளம் மிக்க நிலத்தில் பயிரிடுவது போல, வளம் மிக்க நீரிலும் பயிரிட மனிதன் தெரிந்து கொண்டு விட்டான். இதற்கு ஹைட்ரோபானிக்ஸ் (hydroponics) எனப்படும் "மண்ணில் வேளாண்மை" என்று பெயர். இது ஒரு புதிய சாதனை: பண்டைப் பழம் சுவடுகளை விட்டு விலகி, புதிய சுவட்டில் அடி எடுத்து வைத்த வியத்தகு முயற்சி. முன்னால் எல்லாம் விவசாயிகள் இயற்கையாகக் கிடைக்கும் தொழு உரங்களையும். பின்னர் தழை உரங்களையும் கொண்டு, பயிர்களுக்கு உணவும் பசுமையும் ஊட்டி நல்ல விளைச்சலைப் பெறமுயன்று வந்தார்கள். விஞ்ஞான அறிவு முன்னேறத்தொடங்கிய பின், செயற்கை உரங்களை ஊட்டலாம் என்று தெரிந்துகொண்டார்கள். கதிரியக்க அணுவின் உளவு காட்டித் திறத்தைப் பயன்படுத்தி, உரத்தை எவ்வளவில், எப்போது, எதற்காக, இடவேண்டும் என்பதும் இந்நாளில் தெரிந்துவிட்டது.

இவ்வாறு எல்லாம் முன்னேறி வந்த வேளாண்மை இப்போது மற்றொரு புதிய முறையைக் கையாள முற்பட்டிருக்கிறது. அது தான் உவர் நீர்ப்பாசனம் என்பது. நம்பவே முடியாதது போல் தோன்றும் இம்முறை இப்போது பரிசோதனை அளவிலேயே இருந்து வருகிறது. இம் முறையை ஆராய்வதற்கான முயற்சிகள் தொடங்கிச் சுமார் இருபது ஆண்டுகள் ஆகின்றன. சோதனைகள் பேரளவில் உறுதி அளிக்கின்றன. அமெரிக்காவில் வெளியிடப்பட்டு வரும் சைன்டிஃபிக் அமெரிக்கன் என்னும் விஞ்ஞானப் பத்திரிகையில் ஹ்யூகோ பாய்கோ என்பவர் அவற்றைப்பற்றி எழுதிய அரிய கட்டுரையில் கண்ட செய்திகள் சிலவற்றை இங்கே சுருக்கமாகப் பார்ப்போம். இந்த முயற்சியை மேற்கொள்ள வேண்டிய அவசியம் சில நாட்டு மக்களுக்கு மற்ற நாட்டு மக்களைவிட அதிகமாக உள்ளது.

பூமிப் பரப்பின் கால் பகுதிக்குச் சற்றே அதிகமாக உள்ள நிலப் பரப்பில் மூன்றில் ஒரு பங்கு முற்றிலும் அல்லது பெரும்பான்மையும் வறண்ட நிலம், சாதாரணமாகப் பயிரிடுவதற்கு உதவாத நிலம். இந்தப் பெரும் பரப்பு பூமியின் பல கண்டங்களிலும் பிரிந்து காணப்படுகிறது. ஆப்பிரிக்காவில் சகாரா, லிபியா, ஆசியாவில் அரேபியா, பாரசீகத்தில் உள்ள தோராஸ்ஸான், சைனாவில்

உள்ள கோபி, (இதற்குச் சைஞ வின் வறண்ட கடல் என்று அருமையாகப் பெயரிட்டிருக்கிறார்கள்); ஆஸ்டிரேலியாவில் உள்ள பெரும் மணற் பாலைவனம்: வட அமெரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும் உள்ள வறண்ட நிலங்கள் ஆகியவை எல்லாம் வேளாண்மைக்குச் சிறிதும் உதவாப் பகுதிகள் என்று கருதப் பட்டு வந்தன. இந் நாளில் சிலருடைய அன்பையும், சிலருடைய பகைமையையும் பலருடைய வியப்பையும் கவர்ந்த இஸ்ரேல் நாட்டில் நேகப் (Negap) என்னும் மணற் பாலைவனம் ஒன்று உள்ளது. அது இத்தகைய உதவாக் கடை நிலம்

இஸ்ரேல் நாட்டு மக்கள் மிகப் பெரும்பான்மையோர் மிக நெடுங் காலமாகத் தங்களுடைய நாடு என்று ஒரு நாடு இல்லாத யூத மத மக்கள் - ஜெர்மனி போன்ற நாடுகளில், நினைக்கவும் மனம் கூசும் கொடுமைகளுக்கு அம் மதத்தினர் (சாதியினர்) பலர் உள்ளாக்கப்பட்டனர். ஜெர்மானியரின் இன வெறியில் அறுபது லட்சம் யூதர் கொலை யுண்டனர். ஐன்ஸ்டைன் போன்ற பெரு மேதைகளில் பலர் அவ் வினத்தைச் சார்ந்தவர்கள். போர் முடிவடைந்ததும் தங்களுக்கு என்று நாடு ஒன்று வேண்டும் என்னும் தீவிரமான ஆவல் அவர்களுக்கு ஏற்பட்டது. ஊக்கம், ஆர்வம், அறிவு, செல்வம், முதலிய பண்புகள் யாவும் உடைய அத் தகையவர்களுக்குச் சொந்த நாடு என்று இஸ்ரேல் பிரித்துக் கொடுக்கப்பட்டது. அதன் பின்பு அவர்கள் அங்கே திரளாக வந்து குடியேறினார்கள். அளவிலா நாட்டுப் பற்றோடு, தங்கள் நாட்டைத் தலை சிறந்த நாடாக ஆக்கவேண்டும் என்று முயலத் தொடங்கினர்கள். தங்கள் நாட்டின் நீர்வள நில வளங்களைப் பெருக்க முழு அறிவோடும், சோர்வே அறியாத முயற்சியோடும் முற்பட்டார்கள்.

அந்த நாட்டில் நெகெப் என்னும் பெரும் பாலைவனம்— மணலே செறிந்து, மரமே இல்லாப் பாலைவனம் - ஒன்று இருக்கிறது. மக்கள் குடியேறியும் இனம் பெருகியும் மிகுந்துவரும் நிலையில், நிலவளத்தை நீர்வளத்தால் பெருக்குவதும், உணவுப் பொருள்கள் முதலியவற்றைப் பஞ்சம் வருமுன்னே தேடிக் கொள்வதும் தான் அறிவு. பிறர் கையைப் பார்த்திருப்பது பேதமை.

உலக நிலையைப் பார்க்கும் போது நன்னீரில் அளவு குறைவு. அது கிடைக்கும் வாய்ப்பு ஒரு சில இடங்களில் மிகுந்தும், பல இடங்களில் குறைந்தும் காணப் படுகிறது. ஆயினும் உலகில் நீருக்குக் குறைவில்லை - முக்கால் பகுதியாகிய கடல்களில் ஒன்றுக்கும் உதவாதது என நாம் நினைத்து வரும் உவர்நீர் நிரம்பிக்கிடக்கிறது.

ஆகையால், இந்தப் பிரச்னையில் ஈடுபட்ட அறிஞர்கள் உவர் நீரைப் பாசனத்துக்குப் பயன்படுத்த முடியுமா? அதை நேரில் பயன் படுத்த வழி உண்டா? அல்லது அதை நன்னீர் ஆக்கினால் தான் பயன்படுத்த முடியுமா? என்று

எல்லாம் அறிஞர்கள் தேடினர்கள். இது இஸ்ரேல் நாட்டின் பிரச்னை மட்டும் அன்று. உலகம் எங்குமே மணற் பரப்புக்கள் உள்ளன. எங்குமே நன்னீர் வசதிகள் குறைவு. ஆதலால், உலகம் முழுவதுக்கும் பொதுவான இந்தப் பிரச்னையைத் தீர்க்க 1965-ம் ஆண்டில் இரண்டு மாநாடுகள் கூட்டப்பட்டன.

முதலாவது மாநாடு ரோம் நகரில் கூடிற்று. அதில் இருபத்து மூன்று நாடுகள் கலந்துகொண்டன. நூற்று நான்கு ஆராய்ச்சியாளர்கள் (அவர்களில் சிலர், 1949-ம் ஆண்டு முதலே, இப்பிரச்னையைத் தீர்ப்பதில் ஈடுபட்டு ஆராய்ந்து வந்தவர்கள்) பங்கு கொண்டார்கள், இந்த மாநாட்டில் உவர் நீரை நன்னீர் ஆக்கியோ, நன்னீர் ஆக்காமலோ நீர்ப்பாசனத்துக்குப் பயன்படுத்த முடியுமா என்பதை அவ்வனைவருமாக ஆராய்ந்து விவாதித்தார்கள்.

இரண்டாவது மாநாடு இதற்குச் சில வாரங்களுக்குப் பின் வாஷிங்டன் நகரில் நடைபெற்றது. கடல்களில் ஏராளமாக உள்ள உவர்நீரை நன்னீராக்குவது எப்படி என்பதே இந்த மாநாட்டின் முக்கியமான குறிக்கோள். இவ்வாறு செய்வதற்குச் செலவு அதிகம். ஆதலால் அளவறிந்து, வரவு செலவு கணக்குப் பார்த்து, கைத்தொழில்களை நடத்திவருதல் மதிப்பு மிக்க பயிர்களைச் சாகுபடி செய்தல், மக்கள் வாழ்க்கைக்கு உரிய குடி நீராகப் பயன்படுத்தல் போன்ற ஒரு சில முக்கியமான காரியங்களுக்கே அப்படிப்பட்டவிலை உயர்ந்த நீரை வழங்குவது அறிவுடைமை என்பதையும், அப்போதும் அதை மிக மிகச் சிக்கனமாகவே, வீணாக்காமலும் பயன் இன்றிப் போகாவாறும் செலவிட வேண்டும் என்பதையும், அங்கே கூடிய அறிஞர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள்.

உவர் நீரை நன்னீராக்குவதற்கு இரண்டு முக்கியமான முறைகள் உள்ளன. ஒன்று காய்ச்சிஞல். அதிலிருந்து எழும் நீராவியில் உப்பு முதலியவைகளின் கலப்பு இருக்காது; அது தூய்மையானது. அந்த ஆவியைக் குளிர வைத்தால் தூய நன்னீர் கிடைக்கும். இது தான் இயற்கை பின்பற்றி வரும் முறை. சூரியனின் வெப்பக் கதிர்கள் கடல் நீரில் உறைத்து. அதை ஆவியாக்கி, மேலே எழச் செய்து, வானில் குளிர்வித்து மேகமாக்குகின்றன. அம் மேகங்களிலிருந்து அமிழ்தம் போன்ற (அமிழ்தம் என்றே பெயர் பெற்ற) நன்னீர் மழையாகப் பொழிகிறது. இரண்டாவதான மற்ருெரு முறை மின்னூற் பகுப்பு முறை. இந்த முறையில் உப்பு முதலிய வேண்டாப் பொருள்களை மின்சாரத்தின் ஆற்றலால் வேருக நீக்கியும், நன்னீரைத் தனியாகப் பெற்றும் வரப்படுகிறது. இவ்விரண்டும் செலவு மிக்க முறைகள். வரவு செலவு கணக்குப் பார்த்தே கையாளப்பட வேண்டிய முறைகள்.

—“தினமணி சுடர்”

# அகத்தைக் காட்டும் முகம்

[ வி. ஆர். மதனகோபால், எம். ஏ. ]

அகத்தைக் காட்டும் முகம் என்பது உள்ளபடியே உண்மையான கூற்று. உள்ளத்து உணர்ச்சிகளைத் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டுவது மட்டுமின்றி, முகம், ஒருவரது குணாதிசயங்களையும் கூறுகிறது. மனத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி முகம் என்றும் சொல்வதுண்டு.

விஞ்ஞான ரீதியாக இது சாத்தியமா என்று ஆராய்ந்து பார்த்தால் இது சாத்தியம்தான் என்று பதில் கிடைக்கிறது. இப்படி முகத்தைக் கொண்டோ, அல்லது உடலின் வேறு உறுப்புகளைக் கொண்டோ பலன் சொல்வதை ஆங்கிலத்தில் பிசியானமி' என்று கூறுகிறார்கள்.

பிசியானமி என்ற வார்த்தை கிரேக்க மொழியினின்று வந்தது. "உடலைக் கொண்டு இயல்புகளை எடுத்துக் கூறும் இயல்" என்பது தான் அக்கிரேக்க வார்த்தைகளின் அர்த்தம். அகராதிகளிலேயே அடிப்படை என்று கருதப்படும் 'ஆக்ஸ்போர்டு அகராதி, 'பிசியானமி' என்ற வார்த்தைக்கு, 'முகம் அல்லது உடலின் உருவ அமைப்பு ஆகியவற்றினைக் கொண்டு ஒருவரின் குணாதியங்களைக் கூறும் கலையே" என்கிறது. இக்கலையை அறிவியல் ரீதியாகப் பல அறிஞர்கள் ஆராய்ந்து இருக்கிறார்கள்.

உள்ளத்தில் உண்டாகும் உணர்ச்சிகள், உடலின் உறுப்புகளில், முக்கியமாக முகத்தில் பற்பல மாறுதல்களை ஏற்படுத்தி உலகுக்கு உண்மையை உரைத்து விடுகின்றன.

ஒருவன் கோபமாக இருக்கிறான் என்பதை அவனுடைய முகத்தைப் பார்த்தே தெரிந்து கொள்ளலாம். கண்ணீர் விட்டு அழா விட்டாலும் ஒருவருடைய வருத்தத்தை அவருடைய முகத்தைக் கொண்டே கண்டு கொள்ளலாம். இப்படியே மகிழ்ச்சியும், வெறுப்பும் இன்ன பிற உணர்ச்சிகளும் வெளிப்படுகின்றன. நடிகர்கள் தங்களது நடிப்புத் திறமையால் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது அவர்களது முகபாவங்களின் மூலம் தானே!

சிலருடைய முகத்தை நாம் பார்த்தவுடன் நமக்குப் பிடித்து விடுகிறது. சிலரது முகம் நமக்குப் பிடிப்பதில்லை. அவர்களுடன் நாம் பழகியிரா விட்டாலும் கூட. ஏன்? இதற்குக் காரணமிருக்கிறது.

முகம் ஒருவருடைய குணத்தையும், அவருடைய நடத்தையையும் கூறுகிறது. முழுக்க முழுக்க அல்

லாவிடினும் ஓரளவுக்கேனும் நமக்கு ஒருவருடைய முகத்தைப் பார்த்த உடன் ஓர் அபிப்பிராயம் ஏற்பட்டு விடுகிறது. அதனுல் நாம் ஒன்று அவரை விரும்பவோ, அல்லது இரண்டு அவரைவெறுக்கவோ மனதாரச் செய்கிருேம். இது மனோ தத்துவ ரீதியுடன், விஞ்ஞான அடிப்படையில் முகபாவத்தை அளக்கும் கலை.

இந்தக் கலையை கிரேக்க அறிஞர்களான அரிஸ்டாட்டில், பிளாட்டோ போன்றவர்கள் வியந்து பாராட்டியுள்ளனர். லவேடர், சார்லஸ் டார்வின் போன்ற விஞ்ஞானிகளும் இக்கலையைப்பற்றி எழுதியுள்ளனர். டார்வின் இதை ஒரு கலையல்ல, அறிவியல் துறையில் ஒரு பகுதி என்று கூறுகிருர். வியன்ன, பாரிஸ் பல்கலைக்கழகங்களில் பணியாற்றிவந்த விஞ்ஞானப் பேராசிரியர். டாக்டர் ஜி. ஸ்பெர்ஜெயம். இதைப் பற்றி ஆராய்ந்து ஓர் அருமையான ஆராய்ச்சிப் புத்தகம் எழுதியிருக்கிருர். சர் சார்லஸ் பெல், அலெக்சாண்டர் வாக்கர், டாக்டர் ஏட் பீல்ட் போன்ற அறிவியல் மேதைகளும்இக்கலையைப் பற்றிப்புத்தகங்கள் எழுதியுள்ளார்கள்.

'' திரியூ பிசியானமி '' என்னும் சிறந்த புத்தகத்தை சாமுவேல் வெல்ஸ் என்பார் எழுதியிருக்கிருர். (இப்புத்தகம் இப்பொழுதுகிடைப்பது அருமை) இக்கலையின் முந்தைய வரலாற்றினைச் சுருக்கமாக விவரிக்கிறது முதலில். பின்னர் நவீன கால வளர்ச்சியைக் கூறுகிறது. சாமுவேல் வெல்ஸ் பலப்பல ஆராய்ச்சிகள் செய்து, தானே பல விதமான குண இயல்புகளைக் கொண்டவர்களைப் பரிசீலித்து மிக நன்ருகப் பயன் தரத்தக்க வகையில் எழுதியிருக்கிருர்.

இந்தக் கலையில் என்ன நன்மை என்று கேட்டால், இது நம்மை நாமே உள்ளபடியே உணர்ந்து கொள்ள உதவுகிறது. நம்மிடமுள்ள குறைபாடுகளை அறிந்து கொண்டால் அவற்றைக் களைவது சுலபமல்லவா? அது மட்டுமல்லாமல் பெற்ருேர்கள் தங்கள் குழந்தைகளைப்பற்றிச் சரியாக அறிந்து கொள்ள மிகவும் உதவுகிறது இக்கலை. பள்ளியாசிரியர்களும் இதனை அறிந்தால் மாணவர்களை நல்ல முறையில் பயிற்றுவித்து அவரவர்களுக்கேற்ற துறையில் அவர்களை வழி காட்டிச் செல்லலாம். நல்ல முறையில் இந்தக் கலையை அறிந்தால் எத்தனையோ பிரச்சினைகளைச் சமாளிக்கலாம்.

ஜெர்மனி போன்ற மேல் நாடுகளில் வேலைக்கு 'இன்டர்வியூ' கொடுக்கும் ஆபீசர்கள் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும், இக்கலையை,

சில குழந்தைகள் சூடிக்கையாக இருக்கும்; சில மந்தமாக இருக்கும். சில பையன்கள் 'வால்'களாக இருப்பர்; சிலர் ஆமை போல் அடங்கிக் கிடப்பர். சிலர் நன்ருகப்படிப்பார்கள், சிலருக்குப் படிப்பென்ருல் விளக்கெண்ணெய் போல் இருக்கும். இப்படி பலப்பல காரணங்களை அறிய, இக்கலையைப் பயன் படுத்தலாம்.

எப்படி இக்கலை இயங்குகின்றது என்று அறிவோம்.

"முகம் என்பது அகத்தைக் காட்டும் கண்ணாடி. முகத்திலுள்ள பெரும்பாலான தசைகள், மனத்தினால் கட்டுப்படுத்தப்படுபவை" என்று கூறுகிறார் அலெக்சாண்டர் வாக்கர், தன்னுடைய "பிசியானமி பவுண்டட் ஆன் பிசியாலஜி" என்ற புத்தகத்தில்.

மூக்கைச் சுற்றியும், மேல் உதட்டுக்கு அருகிலும் சிலவகை தசைகள் இருக்கின்றன. நாம் வெறுப்பினால் முகத்தைச் சுளிக்கும் போதோ, துர்நாற்றத்தை முகரவோ நேர்ந்தால் அந்தத் தசைகள் பணியாற்றி மூக்கைச் சுற்றிக் கோடுகள் விழும்படி செய்கின்றன. மூக்குச் சுருங்கி விரியும் போது, மேல் உதடுகள் மேலேறி சுருங்கி விரிவதைக் காணலாம்.

வாயைச் சுற்றியுள்ள தசைகள் பலப்பல உணர்ச்சிகளை வெளிப்படுத்த வகை செய்கின்றன. அதே நேரத்தில் நாம் பேசவும், உதடுகள் அசையவும் அவை உதவுகின்றன. "ரிசோரியஸ்" எனப்படும் தசை நம் வாயை அகல விரித்து "சிரிப்பு" பண்ண உதவுகிறது. அதன் உதவியில்லாமல் சிரிக்க முடியாது. வாயை மூடுவது, திறப்பது, உதடுகள் அசைவது, உணவை மெல்லுவது, சுருக்கங்கள் ஏற்படுவது, சிரிப்பது, வாய் குவிவது இப்படிப் பலப்பல செயல்களைச் செய்ய உதவுவது தசைகளே!

அதனால் நம் குணாதிசயங்கள் நம்முடைய ஒவ்வொரு அங்கங்களிலும் பிரதிபலிக்கும்படி செய்யப்படுகிறது. அந்தப் பிரதிபலிப்பு ஏற்படுவது நம் கையில்தான் இருக்கிறது. நாம் எப்படி நடக்கிறோமோ அப்படி நம் அங்கங்கள் செயல்படுகின்றன.

சிலருடைய முகங்கள் அழகாக நல்ல உருவ அமைப்போடு இருக்கும். ஆனால், அதில் உணர்ச்சி பாவம் பிரதிபலிக்காது. சிலருக்கு அழகு இல்லா திருக்கலாம். ஆனால் அவர்களது முகம் உணர்ச்சிக் குவியலாய்க் காட்சியளிக்கும். உணர்ச்சிகளும், மனோ பலமும் முகத்தில் பல மாறுதல்களைச் செய்கின்றன. உள்ளத்தில் தோன்றுவதை அப்படியே செதுக்கி விடுகின்றன. முகத்தின் உணர்ச்சிகள்.

"அறிவுக் கூர்மை உள்ளவன்," "ஞானி," "படித்தமேதை" என்றெல்லாம் எப்படிக் கூறுகிறோம்? ஒருவர் முகத்தில் அவர் படித்தவர் என்று எழுதி ஒட்டியா இருக்கிறது? இல்லையே! அவர்கள் முகத் தோற்றத்தைக் கொண்டு நாம் கூறுகிறோம்.

நம் முழு உடலமைப்பே—தலை, முகம், உடல், கை, கால்கள்,—குரல், அமைப்பு, கேசம், தோல்கள் உடற்கூறு இயல்படி உணர்ச்சிகளைக் காட்டும் தன்மையுடையவை.

கை, கால், கண், உதடு, நாக்கு ஆகியவற்றினை இயக்கும்மூலகர்த்தா மூளையே என்பது நமக்கெல்லோருக்கும் தெரிந்த விஷய மாகும். அதே நேரத்தில் தோலின் மென்மையும் கூட இயக்குகிறது. மூளை

என்று அமெரிக்க மருத்துவ நிபுணர்கள் கண்டு பிடித்துக்கூறியிருக்கின்றனர்.

குணாதிசயங்களின்படி வெளித்தோற்றங்களும் மாறுபடுகின்றன என்பது உடற்கூற்று இயலின் விதி. ஒருவருடைய குண இயல்புகளின்படி உடலமைப்பும் மாறுபடுகிறது. இது விலங்கு உலகில் நன்கு உணர முடியும். சிங்கத்தின் உடலமைப்பு மானின் உடலமைப்பிற்கு வேறுபட்டிருக்கிறது. அவ்விரண்டின் இயல்புகளும் வேறு பட்டிருக்கின்ற காரணத்தால் புலிக்கும், பசுவுக்கும் வேறுபாடு இருக்கிறது. உடலமைப்பில் பன்றியும், நாயும் வேறுபடுகின்றன. இது எதனாலென்றால் அவற்றின் இயல்புகளினால் என்றுதான் கூறமுடியும். இயல்புகளுக்கேற்ப இயங்குவதற்காகத்தான் இப்படி உருவ அமைப்புகள் இருக்கின்றன என்று உடற்கூறு இயல்விதி கூறுகிறது.

இயற்கையில் எத்தனையோ வகையான உருவ அமைப்புகள் இருக்கின்றன. ஒவ்வொரு ஜீவராசிக்கும் ஒவ்வொரு விதமான அமைப்பு, ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டு அமைந்து இருக்கின்றது. அவற்றின் உருவத்தில் ஏற்படும் மாறுதல்கள் அவற்றின் குணாதிசயத்திலும், அவை இயங்கும் விதத்திலும் அமைந்து இருக்கின்றன. பொருள்களுக்கு ஏற்றவாறு அவற்றின் அமைப்புகளும், இயல்புகளும் இருக்கின்றன. பயிர் வகைகள் கூட அப்படித்தான். நெற்கதிரைத் தாங்கி நிற்கும் பயிரில் தென்னை தோன்ற. தோன்றினால் அது தேங்காயைத் தாங்காது என்பது இயற்கைக்குத் தெரியும். அதன்படி அதன் அமைப்பு இருக்கின்றது. வேங்கையைப் பார்த்தாலே அது வீறு கொண்டெழும் தன்மை வாய்ந்தது என்று நமக்குத் தெரியும். ஆடு சாதுத்தன்மையுடைய பிராணி என்பதையும் அறிவோம் பருந்துக்கும் புறவுக்கும் உள்ள வேறுபாட்டினை நாம் அறிய முடிவது முதலில் அவற்றின் உருவ அமைப்பிலேதானே!

ஒன்றுபட்டு இயங்குவது என்பது இயற்கையின் இன்னொரு விதி. ஒவ்வொரு பாகமும் மற்றப் பாகங்களுடன் ஒத்துழைப்பதும் முழு உருவமே, மற்றவற்றுடன் ஒத்துழைத்து இயங்குவதும் இங்கு கவனிக்கத்தக்கது. ஒன்றுக்கொன்று பாகங்கள் அல்லது அங்கங்கள் இவ்வளவுதான் இருக்க வேண்டும் என்று அறிவது இதனால் சாத்திய மாகிறது. உடற்கூறு விதியின்படி இன்னின்ன அவயவங்கள் இன்னின்ன அளவுகளில் இருக்க வேண்டும் என்று திட்டமிருக்கிறது. மனிதனின் பாத அளவுப்படி அவன் ஆறு மடங்கு உயரம் இருக்கவேண்டும். நெற்றியின் மேலேயிருந்து, முகவாய்க்கட்டைவரை மொத்த உயரத்தில் ஒரு பங்கு இருக்கவேண்டும். நடுவிரல் முனையிலிருந்து மணிக்கட்டுவரை இருக்கும் அளவும், தலைமயிரின் ஆரம்பத்திலிருந்து முகவாய்க் கட்டைவரை இருக்கும் அளவும் ஒன்றாக இருக்க வேண்டும். முகத்தை மூன்று சமமான அளவாகப் பிரித்தால், முதல்பகுதி

தலைமுடியிலிருந்து புருவங்கள் வரை. அடுத்தது புருவங்களி லிருந்து மூக்கின் நுனிவரை, கடைசிப் பகுதி மூக்கின் நுனியிலிருந்து முகவாய்க் கட்டை வரை இருக்க வேண்டும். இருபக்கமும் கைகளை விரித்தால் நீட்டவாக்கில் இந்த நடுவிரல் நுனிவரை இருக்கும் அளவு நம் உயரத்திற்குச் சரியாக இருக்க வேண்டும். இப்படி இருக்கிறது உடற்கூறு விதி!

பயிற்சி செய்வதனால் தசைகள் வலுவடைந்து பம்மிப்படர்வதும் உண்டு. கைவேலை செய்பவர்கள், மரம் வெட்டுபவர்கள், கருமான் போன்றவர்களுக்குக் கைகளில் தசைகள் நன்கு வளர்ந்திருக்கும். எங்கெந்த உறுப்புகள் அதிகமாக இயங்குகின்றனவோ அந்தந்த உறுப்புகளில் தசைகள் நன்கு வளர்ந்திருக்கும்.

நம்முடைய ஒவ்வொரு அசைவும், எண்ணமும், செயலும் நம் முகத்தில் நிச்சயம் ஏதேனும் ஒரு மாறுதலை ஏற்படுத்தத்தான் செய்யும். முகத்தில் விழுந்து விட்ட கோடுகளைப் பார்த்து நாம் வயதாகி விட்டதை அறிகிறோம். கண்ணைச் சுற்றி விழும் கருவளையங்களின் மூலம் ஒருவன் தீய பழக்கங்களுக்கு அடிமையானவன் என்று அறிகிறோம். காது செக்கச் செவேலென்று ஊதிக் கொண்டு இருந்தால் பெருநோய்க்கு அடையாளம் என்பதை உறுதிப் படுத்திக் கொள்கிறோம்.

மண்டையோட்டின் அளவைக் கொண்டும், அமைப்பைக் கண்டும் அறிந்து கூறும் இயலுக்கு ஆங்கிலத்தில் ''பிசியானமி'க்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஏன். 'பிரேனல்ஜி'யின் அடிப்படையில் தான் 'பிசியானமி' இயங்குகிறது என்பதும் மறுக்க முடியாத ஒன்று.

குணத்தைக் கணிக்கும் இக்கலையின் மூலம் நாம் எவ்வளவோ நன்மைகள் பெறலாம். நம்மிடமுள்ள நல்ல குணங்கள்—நாமே அறியாதன—வெளிப்படும், நம்முடைய குறைபாடுகளையும் அறிந்து, அவற்றினைக் களைய முற்படலாம்.

ஒருவன் நல்லவனா, கெட்டவனா என்பதைக்கூட அவனுடைய முக அமைப்பிலிருந்து எளிதாகத் தெரிந்து கொள்ளலாம். அவன் மூக்கு, வாய், நெற்றி ஆகியவை அமைந்திருக்கும் விதத்திலிருந்து அவன் கொடூரத் தன்மை உடையவனா, இல்லை, பழகும் நல்ல பண்புள்ளவனா, உதவும் குணமுடையவனா என்பதையெல்லாம் அறியலாம்.

முன் நெற்றியின் மேல்பாகம் ஒருவனின் அறிவுக் கூர்மையை உணர்த்துகிறது. இரு புருவங்களின் இடைவெளி ஒருவனின் தனித் தன்மை, சுயமாக சிந்தித்தல் போன்ற குண இயல்புகளை எடுத்துச் சொல்லும். உதடுகளின் அமைப்பு, நட்பில் நாட்டம், அன்பு, பரந்த மனப்பான்மை ஆகியவற்றினை உணர்த்தும். இப்படி ஒவ்வொரு அவயவத்துக்கும் அவற்றின் அமைப்பின்படி பலன்கள்

*[அடுத்த பக்கம் பார்க்க]*

# கொஞ்சம் கொஞ்சுங்கள்!

[ ஈ. என். லவ்லேஸ் ]

✻

உங்கள் குழந்தை பிறந்த இரண்டாம் அல்லது மூன்ரும் நாளிலே அவன் முகத்தில் ஒரு புன்னகைக் குறி இருக்கும்; இரண்டாம் மாத முடிவுக்குள்ளாகப் புன் சிரிப்பைக் காணலாம். பின்னர் திடீரென்று ஒரு நாள் பயல் சிரித்தே விடுவான்! அவன் பொக்கை வாய்மூலைகள் மேலெழ, கண்கள் சுடர் வீச, அவன் கலுக்கென்று சிரிக்கும் அந்த முதல் சிரிப்பு உங்கள் பெற்ற மனசுக்கு எத்தனை உவப்பையும் பெருமையையும் அளிக்கும்.

சில சமயங்களிலே உங்கள் குழந்தை, நீங்கள் எதிர்பாராத, அல்லது வேடிக்கை என்று கருதாத காரியங்களுக்காகச் சிரிப்பான். ஆனாலும் பரவாயில்லை. அவன் சிரிக்கும் போதெல்லாம், நீங்களும் அவனோடு சேர்ந்து சிரியுங்கள். அது உங்களுக்கும் நல்லது, அவனுக்கும் நல்லது. ஒவ்வொரு இன்பப் பொழுதையும் சேர்ந்தனுபவிக்க வேண்டும். அவை மீண்டும் வாரா. இதனால் எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருக்கும் நற் பழக்கம் இளம் பருவத்திலேயே அவனிடம் உறுதியாக அமைந்து விடுகிறது. இது அவன் வாழ்வு முழுவதும் நிலைத்து, அதை ஒளி பெறச் செய்யும்.

---

[46-ஆம் பக்கத் தொடர்ச்சி]

உண்டு. அவற்றினை இங்கு விவரிக்க இடம் போதாது.

முழுக்க முழுக்க ஒருவனின் குணதிசயத்தை நீ அறிய முடியுமா, இக்கலையின் உதவியால் என்று கேட்டால் நூற்றுக்கு நூறு சொல்ல முடியாது என்றே கூற வேண்டும். ஆனல், நூற்றுக்கு எண்பது சதவீதம் உள்ளபடியே கூற முடியும். பெரும் படிப்புப் படித்த டாக்டர்களே சில நோய்களை சரிவர 'டயக்னைஸ்' பண்ண முடியாமல் தவித்துத் திணறுகையில் 'பிசியானமி' மூலம் ஓரளவு சிக்கலான விசித்திர அமைப்புக் கொண்ட முக இயல்பு கொண்டவர்களின் குணதிசயத்தைக் கணிப்பது மெத்தக்கடினம் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? மேலும் எல்லா உலக விதிகளுக்கும் ஒரு விதிவிலக்கு உண்டு என்பதை நினைவு கூர்தல் இங்கு அவசியமாகிறது.

—"முத்தாரம்"

ஒவ்வொரு வேளையும் அவனுக்கு உணவு ஊட்டும் போது, அவனைப் பார்த்துச் சிரியுங்கள்; அவனிடத்திலே பேசுங்கள்; உங்கள் சொற்கள் அவனுக்குப் புரிய மாட்டா. ஆனால் உங்கள் இன்பக் குரலைக் கேட்பதே அவனுக்குப் போதும்; நீங்கள் சந்தோஷமாக இருப்பதைப் பார்த்து, அவனும் சந்தோஷமாக இருப்பான்.

நீங்கள் கோபமாக அல்லது விசனமாக இருக்கும் சமயங்களில் அவனைத் தூக்காதீர்கள். உங்கள் மன நிலையில் ஏற்பட்டுள்ள மாறுதலை அவன் எளிதில் கண்டுகொள்வான். உங்கள் குரலில் வழக்கமாக இருக்கும் இனிமையும், முகத்தில் அமைதியும் இல்லை என்பதை அவன் பளிச்செனத் தெரிந்து கொள்வான். அப்படிப்பட்ட சமயங்களிலே அவனை எடுத்தால், அவன் உடல் சிலிர்க்கும்; அவன் மகிழ்ச்சியும் பாதுகாப்பு உணர்ச்சியும் பறந்தோடிப்போம். இப்படி நீண்ட காலம் செய்து வந்தால், இந்த விறைப்புணர்ச்சியால் அவன் உடலும் உள்ளமும் தாக்கப்பட்டு, அவன் நோய்வாய்ப்படலாம். சிடுமூஞ்சிப்பழக்கம் தொட்டிலிலேயே தொடங்கி விடுவதும், அதற்குப் பெரும்பாலும் பெற்றோரே காரணம் என்பதும் ஞாபகம் இருக்கட்டும்!

வீட்டு வேலை அதிகம் இருக்கலாம். என்றாலும் இடையிடையே குழந்தையிடம் சென்று, இரண்டொரு நிமிஷம் அவனோடு செலவழிக்க வேண்டும்; அவனைப் பார்த்து சிரிக்கவோ, கூ கூ கூ வென்று கூவி வேடிக்கை காட்டவோ, கொஞ்சவோ வேண்டும். குழந்தை தனியாக வாழப் பிறந்தவனல்ல; பிறரிடம் பழகுவதற்கேற்ற தன்மையுள்ளவன். அவனோடு பழகுங்கள், பேசுங்கள், அவனை அடிக்கடி கொஞ்சவும் கொண்டாடவும் வேண்டும். அன்பைப் பொழிய வேண்டும். அவனுக்குப் பாலும் வைடமின்களும் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் இரக்கமுள்ள கவனமும் இனிமையான சூழ்நிலையும். அவன் எப்பொழுதும் பாலுக்காகத் தான் அழுகிறான் என்று நினைக்காதேயுங்கள். அன்புக்காகவும் அழலாம். அவன் பக்கத்திலே சிறிது நேரம் இருந்து, அவனோடு குலாவுங்கள்; பாடுங்கள்.

—"நல்வழி"

# இலக்கிய மகளிர்

திரு. கு கணேசன், எம். எஸ்ஸி., விரிவுரையாளர்,
( பச்சையப்பன் கல்லூரி, காஞ்சி. )

சிந்தைக்கினிய சிலம்பிலே ஈராறு ஆண்டு அகவையாளாக முதற் கண் கண்ணகியைக் காண்கிறோம். கணவன் என்று தன் பெற்றோர் காட்டியவருடன் அன்பைப் பெய்து வாழ்கிறாள். சோழ மன்னர் அவையிலே நடனமாடிய மாமலர் நெடுங்கண் மாதவிபால் 'விடுதல் அறியா விருப்பினைப்' பெற்ற கோவலன் வடுநீங்கு சிறப்பின் தன் மனையகம் மறந்தான். தன்னைப் பிரிந்த கணவன் என்றாவது ஒருநாள் மனந்திருந்தி தன்னிடம் வருவாரென்று காலமெல்லாம் வழிமேல் தன் விழி வைத்துக் காத்திருந்தாள். அவள் தோழி தேவந்திகூட சோம குண்டம், சூரிய குண்டம் ஆகிய பொய்கைகளிலே நீராடி நோன்பிருந்தால் பிரிந்தவர் கூடுவர் என்று கூறியதைக் கேட்ட கண்ணகி அது "பீடு அன்று" எனக் கூறி மறுத்து விடுகிறாள். பத்துப் பதினைந்து ஆண்டுகள் தன்னைத் தனியே தவிக்கவிட்ட கணவனை அவள் எக்குறையும் கூறவில்லை. அதற்கு மாறாக,

"அறவோர்க்கு அளித்தலும்
அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும்
தொல்லோர் சிறப்பின்
விருந்து எதிர் கோடலும்
இழந்த என்னை"

என்று தன்னையே நொந்து கொள்ளுகின்றாள். மாதவியைச் சந்தேகித்துமனந்திருந்தி, கண்ணகியிடம் கோவலன் வந்து,

"சலம்புணர் கொள்கைச்
சலதியோடு ஆடிக்
குலம்தரு வான் பொருள்
குன்றம் தொலைத்தேன்"

என்று வருந்தி உரைக்கின்றான். அதற்குக் கண்ணகி நலம்கெழு முறுவல் நகை முகம் காட்டிக் காற்சிலம்பு இருக்கிறது என்று கூறி, அவனை ஊக்குவிக்கின்றாள். மதுரையிலும் சிலம்பு விற்கச் செல்லும் தன் கணவனுக்குக் குமரி வாழையின் குருத்தகம் விரித்து அமுது படைக்கின்றாள். தன் பொருளை விற்கச் சென்றவனைக் கள்வன் எனக் கூறிக் கொன்றான் பாண்டியன் என்பதைக் கேட்டுத் துடிக்கிறாள். கலைந்த கூந்தலுடன், கொதித்த உள்ளத்துடன் ஒற்றைச் சிலம்பைக் கையிலேந்தி மன்னன் அவை புகுந்து தேரா மன்னன் முன் அவன் நீதி தவறியதை தன் சிலம்பு உடைத்து, மன்னன் வாய்முதல் தெறித்த

மணியின் மூலம் எடுத்துக் காட்டு கிருள். அதையறிந்து மன்னன் மடிய, தன் உயிர் கொண்டு அவன் உயிர் தேடுவதைப்போல் பெருங் கோப்பெண்டும் மாள, பெருங் கோபங் கொண்டுள்ள கண்ணகி மதுரையையே எரிக்கிருள். இவ்வாறு கண்ணகியை நல்ல குடும்பப் பெண்ணுக, கொதித்தெழுந்து வழக்குரைக்கும் மங்கையாக, இறுதியிற் தெய்வ மகளாகக் காண் கிரேம்.

இராமாயணத்தின் தலைவி சிற்றிடையாள் சீதையாவாள் சனக ராசனின் அருமை மகள் கோசலை நாடுடையானின் கோமதி கூனியின் சூழ்ச்சிக்குப் பலியான கைகேயி பரதன் பட்டமாள, இராமன் வனமேக வேண்டுமென்பது அரசரின் கட்டளை யென்று கூற மரவுரி தரித்து மணுளன் காடு செல்வதைக் கண்ட சீதையும் நாட்டைத் துறந்து அண்ணல் இருக்குமிடமே அயோத்தி என்று பின் தொடர்கிருள்.

பின்னர் தைலமாட்டுப் படலத்திலே சுமந்திரனிடம் தன் தந்தைக்குச் சொல்ல வேண்டியவற்றை இராமர் கூறுகிருர். தன் விருப்பினையும் கூறவந்த சீதை நாடாள வேண்டியதன் நாயகனைக்காடாள வைத்த கைகேயி தன் குடி கெடட்டும் என்ரு கூறுகிருள்? இல்லை, தன் மாமனுரை அரசர் என்று கூறி, அரசர்க்கு, அத்தைக்கு என் வணக்கத்தைக் கூறு என்றும், தான் பிரியமுடன் வளர்த்து வந்த பொன்னிற நாகணவாய்ப் புள்ளையும், கிளியையும் போற்றும்படி கூறுகிருள்.

> "அன்னவள் கூறுவா
> ளரசர்க் கத்தையர்க்கு
> என்னுடைய வணக்க முன்
> னியம் பியானுடைப்
> பொன்னிறப் பூவையுங்
> கிளியும் போற்றுகென்று
> உன்னுமென் றங்கையர்க்
> குணர்த்து வாயென்ருள்"

பஞ்சவடியில் மாரீசன் மாய மானுக வந்து நின்ருன். அது வெய்யது என்று கூறியும் கேளாது அதனைப் பிடித்துத் தரும்படி சீதை கூற அதனுல் அண்ணலைப் பிரிய நேரவும், இராவணன் அவளை இலங்கைக்குத் தூக்கிச் செல்லவும், அங்கு அவளை அசோக வனத்தில் சிறை வைக்கவும் ஏதுவாகிறது. வாளேந்திய அரக்கியர் காவல்புரிய, மழைக் கண்ணுடையளாய் எப்போதும் தன் கணவனையே எண்ணியபடி, அவன் தன் நினைவைச் சிந்தையில் தேக்கித் துயிலெனக் கண்களிமைத்தலும், முகிழ்த்தலும் துறந்தாள். கொடிய புலிக் கூட்டத்தில் அகப்பட்ட அப்புள்ளிமான் அண்ணல் தன்னை மணந்த நாளிலிருந்து ஒன்றன்பின் ஒன்ருக நடந்த இனிய நினைவுகளை எண்ணுகிருள். திடீரெனக் கவலை வந்துவிடுகிறது. இனிய அவருக்கு இலைக்கறியை யாரிடுவார்களோ? விருந்துவரின் என்ன செய்வாரோ என்று வருந்துகிருள். அண்ணலைப் பிரிந்ததைவிட, பிறருக்கு விருந்து இடும் பெரும்பேற்றினை

இழந்தமைக்கு மிகவும் வருந்து கிருள்.

''அருந்து மெல்லடகு யாரிட
அருந்துமென்று அழுங்கும்
விருந்து கண்டபோது
என்னுறுமோ?''

என்று கவலைப்படுவதாகக் கம்பர் தீட்டிக் காட்டுகிருர். அத்துன்ப ஓவியத்தை வள்ளுவருங்கூட,

''செல்விருந்து ஓம்பி
வருவிருந்து பார்த்திருப்பான்
நல் விருந்து வானத்த
[வர்க்கு''

என்று கூறுகிருர். இவ்வாறு சீதையைப் பொறுமையின் இருப்பிடமாக, அன்பு மனைவியாகக் கற்புக் கரசியாகக் காண்கிருேம்.

மான் பார்வையும், அன்ன நடையும், சின்ன இடையும், குயிலின் குரலும், மயிலின் சாயலும், கருங்கூந்தலும், எழிலும், பேரழகும் கொண்டவள்—அவள் தான் இராவணன் அருமைத் தங்கை சூர்ப்பனகை. பஞ்சவடி பர்ணசாலையைச் சுற்றிச் சுற்றி வந்த பச்சைக் கிளி! பருவத்தின் கோளாறுபோலும். பார்த்தாள் இராமனை. கொண்டாள் காதல். ''மனத்தில் என்றும்தங்குபவனுகிய கரும்பு வில் மன்னன் மன்மதனுக்கு வடிவமில்லையே. தேவேந்திரனுக்கும் ஆயிரம் நயனம். சிவனுக்கோ சிவந்த, அழகிய தாமரையை ஒத்த மூன்று கண்கள். உலகைப் படைத்த பிரமனுக்கோ நான்கு தடந்தோள்கள் இவரெல்லாம் அல்லாத இவ்வண்ணல் தான் யார்? என்று எண்ணுகிருள்.

''மையோ மரகதமோ
மறிகடலோ மழைமுகிலோ
ஐயோ இவன் வடிவென்
பதோர் அழியா அழகுடை''

யானின் எழில் கண்டு மயங்கி நின்ருள். பின் தேராது யாராக இருப்பினுமென், என் உள்ளங் கவர்ந்த இவரே என் காதலன்; இவரை அடைந்தே தீருவேன் என்று எண்ணுகிருள். காற்சிலம்பும், இடையணியும், நூலிற் கோத்த ஆரங்களும், மேகலையும், கருமணல் போன்ற கூந்தலிற் சூடிய, மலர்களும், அவைகளில் மொய்த்து ஒலிக்கும் வண்டுகளும் சூழ உரியவள் சீதை இருக்க, உலகாளும் எண்ணத்துடன் உலா வந்தாள். குழந்தையின் நடையைக் கூறவந்த புலவன் சிறு சிறு சொற்களை அடுக்கி அந் நடையை,

''குறுகுறு நடந்து சிறுகை
நீட்டி
இட்டும், தொட்டும்,
கவ்வியும், துழந்தும்''

என்கிருர். புதுமைப் பெண்ணைப் பற்றிக் கூற வந்த பாட்டுக்கொரு புலவன் பாரதியும்,

''நிமிர்ந்த நடையும்,
நேர்கொண்ட பார்வையும்'

கொடுத்து மகிழ்கின்றார்.

வள்ளுவரோ,

''அனிச்சப் பூவும்
அன்னத்தின் தூவியும்
மாதர் அடிக்கு நெருஞ்சிப்
பழம்''

என்று கூறி மாதர்தம் காலடியின் மென்மையைக் காட்டுகிறார். ஆனால் சூர்ப்பனகையின் நடையோ அன்ன நடை. ஆனால் ஆபத்தான நடை; வண்ண நடை ஆனால் வம்பு இளக்கப்போகிறவளின் நடை. எழில் நடை ஆனால் ஏமாறப் போகிறவளுடைய நடை. அது ஒரு வஞ்ச நடை.

''பஞ்சியொளிர் விஞ்சுகுளிர்
பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர்
சீறடி யளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென
அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென
வஞ்சமகள் வந்தாள்''

என்று அவள் நடையையும், அவள் உள்ளக் கிடக்கையையும் விளக்குகின்றார்.

வந்தவள் இராமனின் அருகில் நின்றாள்.

'ஏதுபதி? ஏது பெயர்?
யாவர் உறவு?''

என்று தவறிப்போய் அண்ணல் வினவ,

''பூவிலோன் புதல்வன் மைந்தன்
புதல்வி முப்புரங்கள் செற்ற
சேவலோன் துணைவனான
செங்கையோன் தங்கை திக்கின்
மாவெல்லாம் தொலைத்து
வெள்ளிமலை எடுத்து
உலகமூன்றும்
காவலோன் பின்னை காமவல்லியாம்
கன்னி என்றாள்''

அண்ணல் அவள் பெயரைப் பற்றிக் கேட்டதும் தான் சூர்ப்பனகைக்குத் தன் பெயரின்மேல் பெரிதும் வெறுப்பு வந்தது. தன் உள்ளக்கிடக்கையைப் பெயரைச் சொன்னவுடனேயே வெளிப் படுத்துவதுபோல இருக்க வேண்டு மென்று ''காமவல்லி'' என்று மாற்றிக் கூறுகிறாள். மங்கைப் பருவத்தைக் கடந்து, மணம் செய்து கணவனுடன் வாழ்ந்து அவனும் மடிய, கைம்மை நோன்பைக் கடைப்பிடிக்க வேண்டியவள் அக் 'காமவல்லி'! ஆனால் அண்ணலிடம் தான் ஒரு கன்னிப் பெண் என்று ஒரு மாபெரும் பொய்யைக் கூறுகிறாள். முடிவில் அவள் எண்ணத்திற்கு ஏதும் ஈடேறவில்லையாதலால் பின்னர் இலக்குவனிடம் தன் காதலை எடுத்துக் கூறுகிறாள். அண்ணனிடமுள்ள அமைதியும், சாந்தமும் இளையவரிடமில்லை. முதிராக் காதலின் விளைவு மூக்கறுபட்டாள். கற்பைப் பெரிதென்று மதியாது கண்டவர்மேல் உடன் காதல் கொள்ளும் பெண்ணாக சூர்ப்பனகையைக் காண்கிறோம்.

பெண்ணினத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். மருக்கொழுந்தைப் போன்றவர் முதல் வகை. மருக்கொழுந்துச் செடியிலே மலரில் மட்டும் மணம் இல்லாது செடிமுழுவதும் மணம்இருக்கும். அதுபோல் இவர்களின் செயலாலும், பண்பாலும் சிறப்புற்று விளங்கிக் கைப்பிடித்த கணவனைக் கடவுளென எண்ணிக் கற்புக் கடம்பூண்ட பொற்புடைய பெண்டிராக வாழ்ந்து வருபவர்கள். இவர்கள் என்ஞான்றும் இதயத்தில் வைத்துப் போற்றப் படுபவர்கள். காலத்தால் இவர்கள் புகழ் அழியாது நிலைத்து நிற்கும். இச்சிறப்பு சீதைக்கும், கண்ணகிக்கும் உண்டு. இரண்டாம் வகையினர் பேய்க்கரும்பைப் போன்றவர்கள். பேய்க்கரும்பு தோற்றத்தில் கரும்பைப்போல இருப்பினும் சுவைத்துப் பார்த்தால் இனிக்காது. இவ்வகைப் பெண்டிரும் பெண்ணாக இருப்பினும் வாழ்வில் எந்த நோக்குமின்றி மனம்போன போக்கில் போய், கற்பைப் பெரிதென்று எண்ணாது வாழும் அவர்கள் சமுதாய ஏட்டின் கறை படிந்த பக்கங்கள். சூர்ப்பனகை இதற்கு நல்ல ஓர் உவமையாவாள்.

—காஞ்சி பச்சையப்பன்
கல்லூரி இதழ்


**"ஆரம்பக் கல்வி"**
**ஆபீஸ்.**
**94–95, புதுத்தெரு,**
**மண்ணடி, சென்னை-1.**

*மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்*
(ஆங்கிலம்) 100 ரூ. 2–50

*ரிக்கார்ட் ஷீட்டுகள்*
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

*பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்*
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

*பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்*
(ஆங்கிலம்) 100 ரூ. 1-00

*வருடாந்திர பிராவிடெண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்*
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

Form of Certificate of income
*வருமான நற்சாட்சிப் பாரங்கள்*
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

தபால் செலவு பிரத்தியேகம்

*முக்கிய அறிவிப்பு*

Book Post-ல் பாரங்களை *அனுப்பத் தபால் செலவு:*

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

*வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.*

# உட்ரோ வில்ஸன் பொன்மொழிகள்

நடப்பு ஆண்டு பிப்ரவரி 22-ம் தேதி (வாஷிங்டன் பிறந்த நாள்) இந்தியாவில் அமெரிக்கத் தேசியத் திருநாள். இந்த ஆண்டு உட்ரோ வில்ஸனுக்குக் காணிக்கையாக்கப் பெற்றுள்ளது. அமெரிக்காவின் இருபத்து எட்டாவது அதிபராக இருந்த வில்ஸனுடைய பொன்மொழிகள் சிலவற்றை இங்குத் தருகிறோம்.

**அமெரிக்கா—**

ஆளுவோரைக் கொன்று விடுவதால் ஆட்சியை அழித்துவிட முடியாது, அமெரிக்காவில்.

**பழமைப் பற்று—**

பொதுவாக இளைஞர்களைத் தீவிரவாதிகள் என்று கருதுகிறோம். பொதுவாக நிலவும் தப்பான கருத்து இது. பட்டப் படிப்புக் கல்லூரி மாணவர்களைப் போல் பழமைப் பற்று மிக்கவர்களை நான் எங்கும் கண்டதில்லை.

**ஜனநாயகம் —**

உலகத்தை ஜனநாயகத்துக்கு ஆபத்தில்லாததாக ஆக்க வேண்டும்.

ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ளவன் நான்; ஏனெனில், அது மனிதர் ஒவ்வொருவருடைய ஆற்றலையும் வெளிப்படுத்துகிறது.

**சுதந்திரம் —**

அரசாங்கத்தை மக்கள் கண் காணிக்கும் இடத்தில்தான் சுதந்திரம் வாழும்.

**நட்பு—**

அன்பின் நோக்கம் பணி புரிதல், வெல்வதன்று.

**இன்றியமையாமை—**

இன்றியமையாத மனிதர் என்று ஒருவரும் இல்லை. ஆட்சி நடத்தும் பொறுப்பைத் தங்கள் கையில் ஒப்படைக்கும்படி கேட்டு நிற்கும் சீராளர்களில் ஒருவரை அவர் வீட்டிலேயே இருக்கட்டும் என்று விட்டு விட்டால் ஒன்றும் குடி முழுகிப் போகாது; அரசாங்கம் கவிழ்ந்து விடாது.

**தீர்ப்பு—**

அவசரப்பட்ட ஆயிரம் ஆலோசனைகளும் சரி, ஆர அமரச் செய்த ஒரு தீர்ப்பும் சரி.

**சட்டம் —**

சமுதாயத்தின் சிந்தனையையும் பழக்க வழக்கங்களையும் வடித்தெடுத்த தெளிவே, சட்டம்.

# பண்டைத் தமிழகமும் அன்றைய உலகமும்

[ இரா. நாகசாமி ]

※

தமிழகம் உலகின் மையமாகத் திகழ்ந்து அதைச் சுற்றியே வாணிகம் நிகழ்ந்த காலம் அது ; சங்கம் வளர்த்த காலம் ; செந் தமிழ் செழித்த காலம் ; இயல், இசை, நாடகம் மலர்ந்த காலம் ; வள்ளுவர் அன்பு வழியை அருளிய காலம் ; அந்தக் காலத்தில் தமிழகம் உலக நாடுகளின் மைய மாகத் திகழ்ந்தது. காரணம் ? இயற்கை அன்னை கொடுத்த செல் வம் அது. அன்று மேலை நாடு களில் சிறப்புற்று விளங்கிய நாடு கள் கிரேக்க நாடு, உரோமானிய நாடு, எகிப்து நாடு, அரேபிய நாடு என்பவையே. கீழை நாடுகளில் சிறந்தவை கடாரம், காம்போஜம், சீனம் முதலிய நாடுகள். மேலை நாடுகளுக்கும் கீழை நாடுகளுக்கும் மையமாக இருப்பது தமிழகம் தானே. அதுவும், அன்று கடல் வாணிகம் சிறந்த காலம். எனவே மேலை நாட்டிலிருந்து வரும் கலங்க ளாகட்டும், கீழை நாட்டிலிருந்து வரும் கலங்களாகட்டும், தமிழ கத்தின் வழியாகவே செல்லும். தமிழ் மக்கள் உலக மக்கள் அனைவருட னும் தொடர்பு கொண்டிருந்தனர். அவர்களை அன்போடு வரவேற்று உணவளித்து, இன்சொல் பேசி, அறிவு வழங்கினர். இதை நான் சொல்லவில்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முன்னர் சீனத் தில் இருந்த நூலாசிரியர் தமிழ் மக்களைப் பற்றிக் குறித்துள்ளார். 'பான்கோ' என்ற அவர், காஞ்சி யைப் பற்றிக் குறித்துள்ளார். 'ஹுவாங்செ' என்று (காஞ்சி யின்) பெயர். அந் நாட்டிற்குச் சீனத்திலிருந்து வணிகர்கள் செல் வார்கள். சீன வணிகர் வெளி நாட்டுக் (தமிழ்க் கலங்களிலேயே) கலங்களிலேயே செல்வர், அவர் களைத் தமிழ் மக்கள் அன்போடு வரவேற்று உணவளிப்பார்கள். முத்து, வைடூரியம் முதலியவற் றைச் சீன வாணிகர்கள் வாங்கிச் செல்வர் என்றும் அவர் குறிக் கிறார். பெரிய முத்துக்கள் ஏழு அங்குல நீளம் இருந்தன என்றும் குறிக்கிறார். இவ்வாசிரியர் கி.மு. 150–இல் வாழ்ந்தவர்.

இவர்க்கும் முன்னர் வாழ்ந்த மெகஸ்தனிஸ், பாண்டேய நாட் டைக் குறித்துள்ளார். அந்நாட் டைப் பெண்களே ஆண்டனர் என்றும், அந்நாட்டின் முதல் அரசி ஹெராக்ளிசின் பெண் என்றும் அவர் குறிக்கிறார். இது தமிழகத் துப் பாண்டி நாட்டைக் குறிக்கும் என்று ஆராய்ச்சியாளர் குறிப்பர். ஆனால் அவர் குறிப்பது தமிழகத் துப் பாண்டிய நாட்டையா அல்லது கூர்ஜரப் பகுதி யையா என்ற ஐயம் எழு

கிறது. உரோமானியப் பேரரசு நிலை நிறுத்துவதற்கு முன், கடல் வாணிகம் தமிழ் மாலுமிகளிடமும் அரேபியர்களிடமும் இருந்தது. எகிப்து நாட்டில் அம்மான் ஹோரா என்ற தெய்வத்துக்கு, இந்தியர் ஒருவர் தன் கடற் பயணம்வெற்றி பயந்ததற்கு நன்றியாக வழிபாடு செய்தார் என்று, அங்குள்ள கல் வெட்டு கூறுகிறது.

உரோமானியப் பேரரசு நிறுவப் பட்டவுடன் தமிழகத்திற்கும் மேலை நாடுகளுக்கும், வர்த்தகம் பெருகியது. புகழ் வாய்ந்த அகஸ்டஸ் என்ற பேரரசர் கி. மு. 25-ல் ஏடன் பகுதியைக் கைப் பற்றினார். அக்காலத்தில் ஹிப்பா லஸ் என்ற மாலுமி பருவக்காற் றின் உபயோகத்தைக் கண்டு பிடித்தார். இதற்கு முன்னர் வர்த்தகக் கப்பல்கள், அரபு நாட்டுக் கடற்கரை ஓரமாகவே மேலைக் கடற்கரைக்கு வந்து தமிழ் நாட்டுக்கு வரும் கடற்கரைப் பகுதிகளில் கடற் கொள்ளைக்காரர் கள் இருந்தனர்; எனவே, கடல் பயணம் அல்லல் மிகுந்திருந்தது. ஹிப்பாலஸ், நடுக்கடலில் பருவக் காற்றின் உதவியால் கலங்களைச் செலுத்திக் குறுகிய காலத்தில் மேலைக் கடற்கரையை அடைய லாம் என்று கண்டார். கடற் கொள்ளைக்காரர்களின் தொல்லை யும் குறைந்தது. எனவே, ஓர் ஆண்டுக்கு 20 கப்பல்கள் மட்டும் வந்தது போக, நாள் ஒன்றுக்கு ஒரு கப்பலாக வரத் தலைப்பட் டது. வாணிகம் மிகச் சிறந்த நிலையை அடைந்தது. உரோ மானியர் மது, பழம், தகரம், ஈயம், வெண்கலம், குடங்கள் முதலியவற்றைக் கொணர்ந் தனர். அதற்குப் பதிலாக மிளகு, தந்தம், நீலச்சாயம், இரும்பு, துகில், கருங்காலி, முத்து, பருத்தி முதலியவற்றைப் பெற்றுச் சென் றனர். அவர்கள் கொணர்ந்த பொருள் போதாது. ஆகையால் தங்கக் காசுகளைக் கொடுத்துச் சென்றனர். தன் நாட்டிலிருந்து தமிழகத்துக்கு ஏராளமான தங்கம் ஏற்றுமதியாவதைக் கண்டு, ஓர் உரோமானிய மன்னன் தங்கம் எடுத்துச் செல்வதைத் தடுத்து ஆணை பிறப்பித்தான் என்று அறி கிறோம். அது என்னவோ உண் மைதான். தமிழகத்தில் ஏராள மான உரோமானியத் தங்கக் காசுகள் கிடைத்துள்ளன. அது மட்டுமா? பல உரோமானியத் தங்க அணிகளும் கிடைத்துள் ளன.

கோவை மாவட்டத்தில் வெள் ளலூர் என்ற ஊரில் உரோமானிய ஆபரணங்கள் கிடைத்துள்ளன. அவற்றில் மூன்று மோதிரங்கள் உள்ளன. அவற்றில் பதிக்கப் பட்டுள்ள கற்கள் ஒன்றில் உரோ மானிய தெய்வத்தின் உருவமும், சிங்கத்தின் உருவமும், எழில் மிகும் குதிரை ஒன்றின் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. அடடா, அந்த எழில் உருவங்களைப் பார்க்க வேண்டும்! என்ன வேலைப்பாடு! சாதாரண மனிதருக்காகச் செய் யப்பட்ட அணிகளே அல்ல அவை. பேரரசன் ஒருவனுடை யவையாகத்தான் இருக்க வேண்

டும். உரோமானியப் பேரரசன் கொங்கு நாட்டை ஆண்ட சேர மன்னனுக்குப் பரிசாக அவற்றை அனுப்பியிருக்கக் கூடும். (இவ் வணிகள் உலகத் தமிழ் மாநாட்டை யொட்டி அமைக்கப் பெறும் கலைக் காட்சியில் முதன் முறையாக மக்களின் காட்சிக்கு வைக்கப் பெற விருக்கின்றன) மேலை நாட்டிலிருந்து மட்டுமல்ல; கீழை நாடுகளிலிருந்தும் தங்கம், தமிழகத்துக்கு ஏராளமாக வந்து குவிந்தது. எனவே சீன தேசத்து மன்னன் ஒருவனும் கி.பி. 1298 ஆம் ஆண்டில், சோழ மண்டலக் கரைக்குத் தங்கமும் வெள்ளியும் செல்வதைத் தடுத்தான் என அறிகிறோம். இவ்வாறு செல்வம் வந்து குவியக் காரணம் தமிழ கத்துப் பொருள்களை அன்றைய உலகம் முழுவதும் போற்றி வாங்கியதால்தான், தமிழ் வணிகர் சிறந்த பண்போடு வர்த்தகம் செய்தனர். "தமிழகத்து மக்கள் வீரம் மிக்கவர்; நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள்; சிறந்த அறி ஞர்களாகத் திகழ்பவர்கள்" என்று யுவான்சுவாங் 1300 ஆண்டுகளுக்கு முன்பே குறிப் பிட்டுள்ளார்.

சங்க காலத்தில் காவிரிப்பூம் பட் டினத்தில் வாழ்ந்த வணிகர்களின் பண்பைப் பட்டினப்பாலை "கொள் வதும் மிகை கொளாது, கொடுப் பதூஉம் குறை கொடாது" என்று குறித்துள்ளதை சீன யாத் திரிகரின் நூல் உறுதிப் படுத்து கிறது. சங்க காலத்தில் காவிரிப் பூம்பட்டினம் தலை சிறந்த துறை முகமாகத் திகழ்ந்தது. கடல் வாணிகமே பூம்புகார் வணிகர்களின் கையில் தான் இருந் தது. தமிழகத்திலிருந்து வெளி நாட்டுக்குச் சென்ற வணிகர்கள் தமிழகத்துக்குப் பெயரும் புகழும் பெற்று அளித்துள்ளனர். சுமத் திரா நாட்டில் கிடைத்துள்ள தமிழ்க் கல்வெட்டு ஒன்று திசை யாயிரத்து ஐந்நூற்று வரைக் குறிக்கிறது. கி.பி. ஐந்தாம் நூற் றுண்டில் தமிழக வணிகர், சயாம் நாட்டின் கீழைக் கரையில் தமிழ ரையர் என்ற வணிகக் கிராமத்தை நிறுவி அளகேசுவரருக்குக் கோயில் எடுத்துள்ளனர். சயாம் நாட்டின் தென் பகுதியில் தக்கோலம் என்று ஒரு துறைமுகப்பட்டினம் உள்ளது. பூம்புகாரிலிருந்து தமிழ் வணிகர்கள் அங்குச் சென்று, ஒரு நகரை நிறுவிக் கோயில் எழுப்பி யுள்ளனர். அங்குத் தமிழ்க் கல் வெட்டு ஒன்றும் கிடைத்துள்ளது. அதில் திருமாலுக்கு ஒரு கோயிலை எடுத்து அவனி நாரணம் என்ற ஏரி தோண்டி, மணிக்கிராமத்தைச் சேர்ந்த வணிகர், நாங்கூர் சேனு முகத்தாரிடம் ஒப்படைத்த செய்தி தமிழில் குறிக்கப்பட்டுள் ளது. அங்குத் திருமாலின் சிலை யும் கிடைத்துள்ளது. அப்போது பூம்புகார், பல்லவ மன்னனை தெள்ளாறெறிந்த நந்தியைக் "கடற்படை அவனி நாரணன்" என்று நந்திக் கலம்பகம் குறிக் கிறது. வெளிநாடு சென்ற நம் வணிகர்கள் அங்குத் தாங்கள் தோற்றுவித்த ஏரிக்குத் தங்கள் மன்னனின் பெயரையே சூட்டி மகிழ்ந்துள்ளனர்.

இது போன்று தமிழ் நாட்டிற்கு வந்த வெளி நாட்டு வணிகர்களும், வெளிநாடு சென்ற தமிழக வணிகர்களும் தமிழகத்தின் பெருமையைப் போற்றியுள்ளனர்.

பல நாட்டுக் கலைஞர்களைத் தமிழகம் போற்றி யுள்ளது. கிரேக்க நாட்டுச் சிற்பிகளைத் தமிழகம் வரவேற்று அவர்களது கலைகளையும் போற்றி யிருக்கிறது என்பது 'யவனத் தச்சரும்' 'யவனர் செய்த வினைமாண்பாவை' என்ற அடிகளிலிருந்து அறிகிறோம். *தமிழ் நாட்டுச் சிற்பிகளை* வெளி நாடுகள் அழைத்துக் கௌரவப் படுத்தி யுள்ளன. நாகப்பட்டினத்தில், தமிழகச் சிற்பி, யாரும் *அறிய முடியாத கட்டிட அமைப்*புடன் ஒருபுத்த விகாரத்தை நிறுவினன் என்றும், பின்னர்க் கீழை நாடுகளுக்குச் சென்றான் என்றும் அறிகிறோம். அச்சிற்பியின் திறனே அவனைப் பல நாடுகளுக்கும் அழைத்துச் சென்றது போலும், பண்டைத் தமிழகத்தில் தோன்றிய பெரியார்கள் பலர், உலக சோதிகளாய்த் திகழ்ந்துள்ளனர். வெளி நாடுகளுக்குச் சென்று அறிவுச் செல்வங்களாகத் திகழ்ந்துள்ளனர். காஞ்சியில் அரசாங்க அதிகாரி ஒருவரின் மகனாகப் பிறந்த 'தர்மபாலர்' என்ற பெரியார், அன்றைய உலகிலேயே சிறந்த நாளந்தா பல்கலைக் கழகத்தின் தலைவராகப் பணியாற்றினார். காஞ்சி அரச வழி வந்த போதிதர்மர் என்பவர் கி. பி. 520 இல் சீனத்துக்குச் சென்றார், அவரைச் சீன மக்கள் 'தமோ' என்று அழைத்துத் தெய்வமாகவே வணங்கினர். 'தியான மார்க்கம்' என்ற வழியை நிறுவியவர் அவரே. அது சீனத்தில் 'சான்' மதம் என்றும், ஜப்பான் நாட்டில் 'சென்' மதம் என்றும் போற்றப்பட்டன.

கி. பி. 661இல் பிறந்த வஜ்ஜிர போதி என்ற பெரியார் நாளந்தாவில் 26 ஆண்டுகள் கல்வி கற்று, காஞ்சி வந்து, அன்று ஆண்ட மன்னனான நரசிம்மவர்மனின் அனுமதி பெற்று ஈழம் சென்று, அங்குப் பல பாரசீகக் கலங்களுடன் சேர்ந்து சீனம் சென்றார். புயல் அடித்ததன் காரணமாக, மற்றையக் கலங்கள் வழி தவறின. வஜ்ஜிரபோதி மட்டும் தப்பிக் காண்டன் நகரை அடைந்து, சீனம் சென்றார். பாரத்துவாச குலத்தைச் சேர்ந்த போதிசேனர் என்ற அந்தணர் சீனத்துக்குச் சென்று, அங்கிருந்து ஜப்பான் நாட்டுக்குச் சென்றார். ஜப்பான் நாடு முழுமைக்கும் பௌத்த சங்கத் *தலைவராக வாழ்ந்து* கி. பி. 760 இல் இறந்தார். ஜப்பானிய எழுத்துக்களைச் சீர்திருத்திய பெரியார் அவரே என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். அவர் இறந்த இடத்தில் எழுப்பப்பட்ட ஸ்தூபம் இன்றும் உள்ளது.

அன்றைய உலக வரலாற்றில் தமிழகத்தின் நிலையை எடுத்துரைக்க வேண்டின், ஒரு பெரும் நூலல்லவா உருவாகும் !

—"தினமணி"

Phone : 24544 Post Box No. 1818

# Association Publishing House

'ஆரம்பக் கல்வி' நிலையம்

94/95, New Street, Mannady, Madras-1.

## ஆரம்பப் பள்ளிகளுக்குரிய எமது பாடப் புத்தகங்கள்

### இரண்டாம் வகுப்பு

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| சிறுவர் வரலாறு | 0·50 | — | — |
| சிறுவர் பூகோளம் | 0·60 | — | — |
| சிறுவர் கணக்கு நூல் | 0·75 | — | — |
| இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும் | 0·40 | — | — |

### மூன்றாம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| சிறுவர் வரலாறு | 0·60 | — | — |
| சிறுவர் பூகோளம் | 0·60 | — | — |
| சிறுவர் கணக்கு நூல் | 0·87 | 37 | 18—5—66 |
| இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும் | 0·50 | — | — |

(3-வது பூகோளம் ஜில்லாவாரியாக வெளியிட்டிருக்கிறோம்.)

### நான்காம் வகுப்பு

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| சிறுவர் வரலாறு | 0·87 | 11 | 18—5—66 |
| சிறுவர் பூகோளம் | 0·62 | 18 | 19—5—66 |
| சிறுவர் கணக்கு நூல் | 1·25 | 3 | 24—5—67 |
| இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும் | 0·75 | 6 | 18—5—66 |

(4-வது பூகோளம், சரித்திரம் ஜில்லாவாரியாக வெளியிட்டிருக்கிறோம்.)

### ஐந்தாம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| சிறுவர் வரலாறு | 1·00 | 42 | 18—5—66 |
| சிறுவர் பூகோளம் | 1·00 | 19 | 18—5—66 |
| சிறுவர் கணக்கு நூல் | 1·50 | 4 | 17—5—67 |
| சிறுவர் ஆரம்ப விஞ்ஞானம் | 1·25 | 9 | 18—5—66 |

# உயர்தர ஆரம்பப் பள்ளிகளுக்குரிய எமது பாடப் புத்தகங்கள்

### ஆறும் வகுப்பு

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| மாணவர் வரலாறு | 1·00 | 54 | 18—5—66 |
| புதுமுறை நில நூல் | 2·00 | 13 | 24—4—68 |

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| புதுமுறை சங்கக் கணிதம் | 1·50 | 50 | 18—5—66 |
| பொது விஞ்ஞானம் | 1·25 | 25 | 18—5—66 |
| அறிவுச்சுடர் (தமிழ் துணைப்பாட நூல்) | 0·62 | 22 | 18—5—66 |
| Mother India Supplementary Reader (ஆங்கிலத் துணைப்பாட நூல்) | 0·50 | 49 | 18—5—66 |

ஏழாம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| புதுமுறை வரலாறு | 1·50 | 18 | 17—5—67 |
| புதுமுறை நில நூல் | 1·50 | 4 | 24—5—67 |
| புதுமுறை சங்கக் கணிதம் | 1·75 | 4 | 24—5—67 |
| பொது விஞ்ஞானம் | 1·50 | 15 | 17—5—67 |
| மேனாட்டு இளைஞர் (தமிழ்த் துணைப்பாட நூல்) | 1·00 | 7 | 17—5—67 |
| Mother India Supplementary Reader (ஆங்கிலத் துணைப்பாட நூல்) | 0·60 | 9 | 17—5—67 |

எட்டாம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| புதுமுறை வரலாறு | 1·80 | 36 | 17—5—67 |
| புதுமுறை நில நூல் | 1·80 | 40 | 17—5—67 |

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| புதுமுறை சங்கக் கணிதம் | 2·00 | 4 | 24—5—67 |
| பொது விஞ்ஞானம் | 2·00 | 4 | 24—5—67 |
| நம் நாட்டு இளைஞர் தமிழ்த் துணைப்பாட நூல் | 1·00 | 7 | 24—4—68 |

## கணிதம் கற்பிக்கும் முறை

ஆசிரியர் : **லீலா. பார்த்தசாரதி**, பி.ஏ., எல்.டி.,

| | | |
|---|---|---|
| *2·00* | *2* | *5-7-'61* |

*(ஆசிரியர்களுக்குத் தக்க கமிஷன் உண்டு.)*

Association English Primer III Class *0·60*
Association English guide IV Class *0·40*
Association English guide V Class *0·50*

## புதுமுறை சங்க வாய்பாடு

*100 பிரதிகள்* *9·00*

## HIGH SCHOOLS

உயர்நிலைப் பள்ளிகளுக்கு

## GENERAL SCIENCE

பொது விஞ்ஞானம்

ஆசிரியர் : **பி. வி. நாகராஜன்**, பி.ஏ., எல்.டி.

| | | | |
|---|---|---|---|
| ஒன்பதாம் வகுப்பு | 1·75 | 33 | 18-5-'66 |

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | 2·00 | 56 | 17-5-'67 |
| பதினோராம் வகுப்பு | 2·80 | 23 | 24-4-'68 |

## MATHEMATICS

### புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர் : **பி. வி. நாகராஜன்,** பி.ஏ., எல்.டி..

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | 2·50 | 6 | 24-5-'67 |

### புதுமுறை நிலநூல்

ஆசிரியர் : **R. பத்மநாபன்,** எம்.ஏ., பி.டி.,

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| ஒன்பதாம் வகுப்பு | 2·00 | — | — |
| பத்தாம் வகுப்பு | 2·50 | 60 | 17-5-'67 |
| பதினோராம் வகுப்பு | 3·00 | 28 | 24-4-'68 |

### புதுமுறை வரலாறு

ஆசிரியர் : **வி. எஸ். இராகவன்,** பி.ஏ., பி.டி.,

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| ஒன்பதாம் வகுப்பு | 2·00 | — | — |
| பத்தாம் வகுப்பு | 2·00 | 59 | 17-5-'67 |
| பதினோராம் வகுப்பு | 2·50 | 24 | 24-4-'68 |

### திரு. வி. க. செந்தமிழ்ச் செல்வம்

ஆசிரியர்கள் : **த. சே. உமாபதி,** எம்.ஏ., எல்.டி.,
புலவர் **தணிகை உலகநாதன்**

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | 2·25 | 45 | 17-5-'67 |

---

(*அங்கீகாரமான தேதி பிறகு அறிவிக்கப்படும்.)

# TAMIL GRAMMER

## இலக்கணம், கட்டுரை, மொழிப் பயிற்சி

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனுர்

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| *ஒன்பதாம் வகுப்பு | 2·00 | — | — |
| பத்தாம் வகுப்பு | 2·00 | 5 | 24-5-'67 |
| பதினேராம் வகுப்பு | 2·00 | 20 | 25-4-'68 |

## தமிழ்த் துணைப்பாட நூல்

### உரிமைக் குரல்

ஆசிரியர் : வித்துவான் வே. வேதாசலம்

| | | | |
|---|---|---|---|
| *ஒன்பதாம் வகுப்பு | 1·25 | — | — |

### மருத்துவ மேதைகள்

ஆசிரியர் : வித்துவான் வே. வேதாசலம்

பதிப்பாசிரியர் : புலவர். தணிகை உலகநாதன்

| | | | |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | 1·25 | 49 | 17-5-'67 |

### உமாபதி உரை நூல்

| | | | |
|---|---|---|---|
| மூன்ரும் வகுப்பு | 0·45 | — | — |
| நான்காம் வகுப்பு | 0·55 | — | — |
| ஐந்தாம் வகுப்பு | 0·65 | — | — |
| ஆரும் வகுப்பு | 1·00 | — | — |
| ஏழாம் வகுப்பு | 1·25 | — | — |

## அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்,

(ஆரம்பக்கல்வி நிலையம்)

94/95, புதுத் தெரு. மண்ணடி, சென்னை-1.

(*அங்கீகாரமான தேதி பிறகு அறிவிக்கப்படும்.)

Edited, Printed and Published by P. VEERARAGHAVAN,
at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.